பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 03 புதன்கிழமை (19.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 23

# இலங்கைக்கு இராணுவ உதவி வழங்க

# 3 நிபந்தனைகளை விதிக்கிறது அமெரிக்கா

## ஐ.நா. மனித உரிமை அலுவலகம் திறக்கப்பட வேண்டும் என்பதும் ஒன்று

வாஷிங்டன், டிசெம்பர் 19

★ கொலைகளில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக விசாரணைகள் நடத்த வேண்டும்.

★ மனிதநேய மற்றும் ஊடகப் பிரதிநிதிகள் தமிழர் பிரதேசங்களுக்கும் தங்கு - தடையின்றிச் சென்றுவர அனுமதிக்கவேண்டும்.

★ மனித உரிமைகள் அலுவலகம் ஒன்றை இலங்கையில் ஐ.நா. திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவுசெய்து, மனித உரிமைகளைப் பேணுவதில் மேம்பாடான நிலையை இலங்கை நெறிப்படுத்தியுள்ளது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தால் மட்டுமே இலங்கைக்கு இனி அமெரிக்க இராணுவ உதவி கிடைக்கும் என அந்நாட்டு நாடாளுமன்றம் தெரிவித்திருக்கின்றது.

இலங்கைக்கான இராணுவ உதவிகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ள அமெரிக்கக் காங்கிரஸ், மேற்படி மூன்று முக்கிய விடயங்களையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்றும் நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கை அரசு மனித உரிமைகள் விடயத்தில் சில முன்னேற்றங்களை எட்டியுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் நிர்வாகம் எழுத்துமூல உறுதிமொழியை வழங்கும் பட்சத்திலேயே இலங்கைக்கான இராணுவ உதவிகள் மீண்டும் வழங்கப்படுமெனவும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, நாகர்கோவிலில் நேற்றும் இருதரப்பு மோதல்

யாழ்ப்பாணம், டிச.19

முகமாலை மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் உள்ள முன்னரங்க நிலைகளில் நேற்றும் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நாகர்கோவில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் ஒன்றில் 3 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததுடன், அவர்களின் பதுங்கு குழி ஒன்றும் தாக்கியழிக்கப்பட்டது என்று படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், முகமாலைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பிறிதொரு மோதலில் 3 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இந்த மோதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தகவல் நேற்று மாலை வரை வெளியாகவில்லை. (அ-2)

## ரயிலில் குண்டுவெடிப்பு

திருகோணமலை, டிசெ.19

திருகோணமலையில் இருந்து நேற்றிரவு கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று கந்தளாய் ரயில் நிலையத்துக்கு அருகே குண்டு வெடிப்புக்கு இலக்கானது என்று அறிவிக்கப்பட்டது.

திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடையில் மாலை நேர சேவையில் ஈடுபடும் ரயில் இரவு சுமார் 8.20 மணியளவில் கந்தளாய் ரயில் நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றவேளை சில மீற்றர் தூரத்துக்கு அப்பால் குண்டு வெடிப்புக்கு இலக்கானது.

இதனால், ரயில் எஞ்ஜினின் முன்பகுதிக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு மீண்டும் இந்தியப் படை வரலாம்; கருணாநிதியை நேற்றுச் சந்தித்தார் நாராயணன்

சென்னை, டிச. 19

இலங்கையில் தொடரும் போர்ப் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இலங்கை இராணுவத்துக்கு ஆதரவாக இந்தியப் படையினரை அங்கு அனுப்பி வைக்கும் திட்டமொன்றை புதுடில்லி திரைமறைவில் மேற்கொண்டு வருகின்றது. தமிழகத்திலிருந்து வெளிவரும் நாளேடான 'தினமணி' இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இது விடயத்தில் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு சென்னை வருகை தந்த தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபின் மீண்டும் புதுடில்லி விரைந்தார் என 'தினமணி' தனது செய்திக்கு மேற்கோள் காட்டியுள்ளது.

கலைஞர் கருணாநிதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சுமார் அரைமணி நேரம் வரை நீடித்த குறித்த சந்திப்பில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில விடயங்கள் - குறிப்பாக இலங்கையில் நிகழும் போர்ச் சூழல் உள்ளிட்டவை - குறித்து விவாதிக்கப்பட்டது என 'தினமணி' குறிப்பிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக் குழுக்கூட்டம் நாளை புதுடில்லியில் நடைபெறவுள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இக்கூட்டங்களில் தமிழக முதல்வர் கருணாநிதி, மாநில நிதியமைச்சர் அன்பழகன் ஆகியோர் பங்கேற்பர். அதற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதப் பேரழிவு நிலை மாறும் வரை நத்தார்க் கொண்டாட்டம் வேண்டாம்

### மதகுருமார் சிலர் வேண்டுகோள்

கொழும்பு, டிச.19

இலங்கையில் யுத்தமும், படுகொலைகளும் காணாமற்போதலும் முடிவிற்கு வரும்வரை நத்தார் கொண்டாட்டங்களைப் புறக்கணிக்குமாறு கிறிஸ்தவ மதகுருமார் சிலர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மாநாடொன்றிற்கு வருகை தந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதகுருவொருவர், 'சகல நத்தார் கொண்டாட்டங்களையும் நிறுத்துங்கள். நத்தார் வாழ்த்துகள் வேண்டாம். மின் அலங்காரங்கள் வேண்டாம். புதிய ஆடைகள் எதுவும் வேண்டாம். எங்களால் இதனைச் செய்ய முடியும்.!' - எனத் தெரிவித்திருந்தார்.

சமீபத்தில் கொல்லப்பட்ட மதகுரு வண.பாக்கியரஞ்சித்தின் நினைவு நிகழ்ச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வீரபுரம் மினிமுகாம் மீது புலிகள் தாக்குதல்; 5 படையினர் பலி!

வவுனியா, டிசெ.19

வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள படையினரின் மினிமுகாம் ஒன்றின்மீது நேற்றுக்காலை 6.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர். அங்கிருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சுமார் 20 படையினர் தங்கியிருந்த இந்த மினிமுகாம் மீதான தாக்குதலில் காயமடைந்த ஏனைய படையினர் அருகிலுள்ள கிராமங்களுக்குள் ஓடித் தப்பினர் என்றும்-

முகாமிலிருந்த கனரக ஆயுதங்களையும் வெடிபொருள்களையும் கைப்பற்றிய பின் முகாமையும் அதிலிருந்த பொருள்களையும் தாம் தீ வைத்து அழித்துள்ளனர் என்றும்-விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

வவுனியாவிலுள்ள படைநிலை ஒன்றைத் தாக்கிய புலிகள் அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்று ஸ்ரீலங்கா படைத்தரப்பில் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## கப்பல் சேவை இன்று இடம்பெறாது

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்வதற்கான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

கப்பல் சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கடற்கொந்தளிப்புக் காரணமாக சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் காலநிலை சீரானதும் சேவை ஆரம்பமாகும் என்றும் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-1)

## தமிழ் மாவட்டங்களில் பெரும் மழை; திருமலை, மட்டு. அகதிகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.19

கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெருமழை பெய்துவருவதாக நேற்றுமாலை கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிப் பகுதியில் பெய்த மழையினால் அங்குள்ள குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இரணைம[illegible]க் குளம் 6 அடி 5 அங்குலமும், கல்ம[illegible] குளம் 16 அடி 2 அங்குலமும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் மழை தொடருமாம்

யாழ்ப்பாணம், டிசெ.19

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மழை தொடர்ந்து பெய்யும் சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றிரவு தெரிவித்தது.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகப் பெய்துவந்த அடைமழை காரணமாக சீரற்றிருந்த கால

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் - மருதடி வீதியைச் சேர்ந்த சங்கீதபூஷணம்

## வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

15.12.2007 அன்று "கலாபூஷணம் விருது" பெற்றதையிட்டு அவரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

887, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சட்டத்தரணி வீரகத்திப்பிள்ளையும்,
நண்பர்களும்.

(69101)

# மூத்த வங்கியாளர் கௌரவிப்பு - 2007

தற்பொழுது சேவையிலுள்ள யாழ்.மாவட்ட வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் தமது வங்கிகளிலிருந்து இளைப்பாறியும் அன்றி வேறு வழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஓய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 23.12.2007 இடம்பெறவுள்ளது.

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(வர்த்தக வங்கிக்கு அருகில்)
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: முற்பகல் 9.30 மணி

பிரதம விருந்தினர்: உயர்திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை
(வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தரும் யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவிக்கப்படுபவர்களையும் கௌரவிப்பவர்களையும் இவ் விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.என்.சிவரத்தினம்,
செயலாளர்.

குறிப்பு: பங்குகொள்பவர்கள் தமது வருகை பற்றி இதுவரை அறிவிக்காவிடின் தயவுசெய்து செயலாளருக்கு அறிவித்து ஏற்பாடுகளுக்கு உதவிசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

வங்கியாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

Bankers' Association,
Jaffna District.

(சி/54749)

# கணனிக்கற்கைநெறிகள்

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 03.01.2008
பிரிவு II : 12.01.2008
பிரிவு III : 23.01.2008
காலை 10.00 மணி

"அனைவருக்கும் கணனிக் கல்வி" எனும் இலக்குடன் பிரத்தியேகமாகவும், குழுவாகவும் குறைந்த கட்டணத்தில் கணனி அறிவினை வழங்கி வரும் நிறுவனம்.

| கற்கைநெறி | காலம் | பயிற்சிக்கட்டணம் | |
|---|---|---|---|
| | | முழுமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
| Dip. in Microsoft Office | 3 Months | ~~3000.00~~ | 1500.00 |
| Dip. in Desk Top Publishing | 3 Months | ~~4000.00~~ | 2000.00 |
| Dip. in Internet Technology | 3 Months | ~~4000.00~~ | 2000.00 |
| Dip. in Hardware Technology | 4 Months | ~~5000.00~~ | 2500.00 |

IBMS

Head Office: # 209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8060
Branches : • நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி,
• சங்கத்தானை, சாவகச்சேரி.

# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## சுப்பிரமணியம் இராசம்மா

மண்ணில் 21.05.1944

விண்ணில் 19.12.1996

திதி: 19.12.2007

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாதம்மா.

திருவத்தம்பை,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை

குடும்பத்தினர்.

(69100)

# தீவக கல்வி வலயத்தின் தமிழ்தினப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறவிருந்த தீவகக் கல்வி வலய நிலை தமிழ்மொழித்தினப் போட்டிகள் பிற்போடப்பட் டுள்ளன.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தீவக வலயக்கல்வி பணிப்பாளர் ஆ.ராஜேந் திரன் அறிவித்துள்ளார்.

(அ-2)

# செயலமர்வு நடைபெறும் இடம் மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.வலய அதிபர்களுக்கான முழுமைத் தர முகாமைத்துவ செயலமர்வு ஏற்கனவே குறிப்பிட்ட திணங்களில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. மற்றும் யாழ் வலய அலுவலக முகாமைத்துவ மண்டபம் ஆகியவற்றில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது யாழ்.மத்திய கல்லூரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202)

## சண்டெல்/ S.L.T. தொலைபேசி

சண்டெல் அல்லது S.L.T. இணைப்பு விற்க விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 4591693
Or 021 4591682

(69104)

# மரண அறிவித்தல்கள்

## இராசலிங்கம் லிங்கேஸ்வரன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசலிங்கம் லிங்கேஸ்வரன் நேற்று (18.12.2007) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் இராசலிங்கம்-காலஞ் சென்ற மணிமேகலையின் அன்புமக னும் ஜெயபாலகிருஸ்ணன் (சின்னராசா)- மகேஸ்வரியின் மருமகனும், ரஜீயின் அன்புக் கணவரும், டிலக்ஷன், டிவாகர், திலக்ஷனாஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதவல்லி, காந்தரூபன் (லண்டன்), சாந்தரூபன் (சுவிஸ்), ராஜேஸ்வரி, சுவேந்திரன் (லண்டன்), சசிகலா, றதிகா, கிரிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கீதா (ஜேர்மனி), ரமேஸ் (கனடா), ஸ்ரீரங்கநாதன், சண்முகநாதன் (காளி), தங்கவடிவேல், நவீந்திரன், பூமா, சோபா, மேகலை, தீபா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2007) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் கௌசிகன் (கௌசி)



அரியாலைப் பிறப்பிடமாகவும் நிரந்தரவசிப்பிடமாகவும்கொண்ட சுப்பிரமணியம் கௌசிகன் (கௌசி) 16.12.2007 ஞாயிற் றுக் கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் சுப்பிரமணியம்-ஸ்ரீரங்ககுமாரி தம்பதியினரின் செல்வப் புதல்வனும், அமரர் இதயராஜ், ஜெயச்சந்திரன் (தபால் திணைக்கள ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவகுமாரி, பங்கயகுமாரி, மோகனகுமாரி, தனகுமாரி, துரைசிங்கம், குணபாலா, சோதிராசா ஆகியோரின் பெறாமகனும், அமரர்களான தேசியநாதன், முருகசேகரம், திருநாவுக்கரசு மற்றும் ஜீவகுமாரி, நாகேஸ்வரி, லோகேஸ்வரி, ஸ்ரீரங்கன்-சியாமளா (தம்பதி) ஆகியோரின் அன்பு மருமகனும், புவனேந்திரன், தர்மேந்திரன், சசிகலா, துஷ்யேந்திரன், துஷ்யந்தி, கயேந்தினி, சர்மிளா, குகேந்திரன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், தனுஷன், சுகந்தினி, வினுசியா, தனுசியா, நிர்மலா, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 68/2 இலந்தைக்குளம் வீதி,
(அம்மன் கோயில் முன்)
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES

# DEPARTMENT OF BUILDINGS

## INVITATION FOR BIDS

### Rehabilitation to Administration Block, University of Jaffna

1. The Chairman, Department Procurement Committee, on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for " Rehabilitation to Administration Block, University of Jaffna" as described below and estimated to cost of Rs.5.9m.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M6/C7 or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the Chief Engineer's Office' (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9.00 hrs to 16.00 hrs.
   **Contact numbers are: Phone: 021-2222781**
   **Facsimile: 021-2222781**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer's Office (Jaffna), Depatment of Buildings, Beach Road, Jaffna, from 19th December 2007 until 05th January 2008 from 9:00hrs to 15:00 hrs upon payment of a non refundable fee of Rupees One thousand (Rs.1,000/-).
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla at or before 10.00 hrs on 08th January 2008** Bids will be opened soon after Closing at the Contract Branch, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla in presence of the bidders' representatives who choose to attend.
7. Tenderers are advised to enter "Sethsiripaya" Premises at least 1 hour before the scheduled time for tender closing due to security checking.
8. All bids shall be accompanied by a Bid Security for an amount of Rupees one hundred and ten thousand (Rs. 110,000.00) which should be valid up to 21st April 2008.

**D.C.A.S. Pathmathilaka,**
Director General of Buildings
Department of Buildings,
"Sethsiripaya", Battaramulla,
www.builgings.gov.lk

C/54753)

MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES

DEPARTMENT OF BUILDINGS

# DEPARTMENT OF BUILDINGS

## INVITATION FOR BIDS

### Construction of District Office Building for Department of Fisheries and Aquatic Resources, Jaffna

1. The Chairman, Department Procurement Committee, on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of District Office Building for Department of Fisheries and Aquatic Resource, Jaffna" as described below and estimated to cost of Rs.15m

   The Construction period is 364 Days.

2. Bidding will be conducted hrough National Competitive Bidding Procedure
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M5/C6 or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road; Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9.00 hrs to 16.00 hrs. Contact numbers are: Phone: 021-2222781 Facsimile: 021-2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna, from 19 th December 2007 until 05th January 2008 from 9.00 hrs to 15.00 hrs upon payment of a non refundable fee of Rupees one thousand (Rs.1,000/=).
6. Bids shall be delivered or sent by registered post to the Chairman, Department Procurement Committee, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla at or before 10.00 hrs on 08th January 2008. Bids will be opened soon after closing at the Contract Branch. Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla in presence of the bidders' representatives who choose to attend.
7. Tenderers are advised to enter "Sethsiripaya", Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to security checking.
8. All bids shall he accompanied by a Bid Security for an amount of Rupees Three hundred and one housand (Rs.301,000.00) which should be valid up to 21st April :2008.

**D.C.A.S. Pathmathilaka,**
Director General of Buildings
Department of Buildings,
"Sethsiripaya", Battaramulla,
www.builgings.gov.lk

C/54752)

# திருமறைக் கலாமன்றத்தின் கூத்துவிழா சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கலையகத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.19.

திருமறைக்கலாமன்றம் நடத்தும் கூத்து விழா எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத் தின் கலைத்தூது கலையகத்தில் நடை பெறவுள்ளது.

ஈழத்தமிழர்களின் மரபுவழிக் கலை வடிவமான நாட்டுக்கூத்துக் கலையை அழியவிடாது பேணும் முயற்சிக்காகத், திருமறைக் கலாமன்றத்தால் மேற்கொள் ளப்பட்டுவரும் பல்வேறு செய்பாடுகளின் ஓர் அங்கமாக இவ்விழா நடத்தப்படவுள் ளது.

இரு நாள்களிலும் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ள இவ்விழா வில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப் பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப்போட்டி யில் வெற்றியீட்டியவர்களுக்கான பரி சளிப்பு, நாட்டுக்கூத்து அளிக்கைகள், நாட்டுக்கூத்துக் கலைக்குப் பங்களிப்புச் செய்த அண்ணாவிமார்களுக்கான கௌர விப்பு என்பவற்றுடன் சிறப்பு நிகழ்வாக கடந்த பல வருடங்களாகக் கலாமன்றம் மேற்கொண்ட பல்வேறு தேடல் முயற்சி கள், ஆய்வுகள் அண்ணாவிமார்களுட னான சந்திப்புக்கள், கருந்தமர்வுகளினூ டாக அழிவின் விளிம்பில் நின்ற தென் மோடி நாட்டுக்கூத்துமரபின் இசை மெட் டுக்களை இயன்றளவில் வகைத்தூய்மை யுடன் இனங்கண்டு, ஒழுங்குபடுத்தி, ஆவணப்படுத்தி அதனை இறுவட்டு வடிவிலும் நூல்வடிவிலும் வெளியிடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கூத்துவிழாவின் முதல்நாள் நிகழ்வுக ளுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசி ரியர் அ.சண்முகதாசும் சிறப்பு விருந்தின ராக அருள்திரு. ம.வி.இ.ரவிச்சந்திரன் அடிகளாரும் இரண்டாம் நாள் நிகழ்வு களுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ - இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் அருள்கலாநிதி ஞா.பிலேந்திரன் அடிகளாரும் கலந்துகொள்வர். (202)

# நிதி ஆதாரங்கள் திரும்பிச் செல்லாத வகையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்

## உறுதி கூறுகிறார் யாழ்.அரசஅதிபர்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மாவட்டத்திற்கு பல வழிவகை களின் ஊடாக வரும் நிதி மீண்டும் திரும்பிச் செல்லாத வகையில் அபிவிருத் திப் பணிகள் முன் னெடுத்துச் செல் லப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.



தீவகம் தெற்கு வேலணை பிரதேச சபை தலைமைப் பணிமனைக்கான புதிய கட்டடம் அண் மையில் திறந்துவைக்கப்பட்டது.

புதிய சபை கட்டடத்தினை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பால சுந்தரம்பிள்ளையும், யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷும் இணைந்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் தொடர்ந்து பேசுகையில்;

2002ஆம் ஆண்டில் பரீட்சார்த்தமாக நியாப் திட்டம் வடக்கு - கிழக்கில் அறிமு கப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் வெற்றியளிக்க ஏனைய பல திட்டங்களும் நீர்ப், நிகொட், நிகாப் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றியளித்து வருகின்றன. எமது நாட்டில் நீடித்த - நிலையான சமாதானம் ஒன்று மிளிர வேண்டும் அதற்காக அனைவரும் பிரார்த் தனை செய்ய வேண்டும் - என்றார்.

வேலணை பிரதேசத்திற்கான பேருந்து நிலையம் அமைத்தல், புலம்பெயர்ந்து சென்றவர்களின் கட்டடங்களைப் பாது காத்தல், வங்கிச்சேவைகளை விரிவுபடுத் தல் உள்ளிட்ட கோரிக்கைகளைப் பேராசி ரியர் பாலசுந்தரம்பிள்ளை முன்வைத்தார். அத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் என அரச அதிபர் உறுதியளித்தார். நீர்ப் திட்டப் பெயர்ப்பலகையை பொன்.பாலசுந்தரம் பிள்ளையும் - புதிய கட்டடத்திற்கான பெயர்பலகையை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபரும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

# மானிப்பாய் பிரதேச சபைக்கென கட்டடம் அமைக்க நிதி தேவை

## யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.19

வலி. தென்மேற்கு(மனிப்பாய்) பிரதேச சபைத் தலைமை அலுவலகம் அமைப் பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷிடம் நவாலி-ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நூலக மும் சனசமூக நிலையத்தின் தலைவர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது;

வலி.தென்மேற்கு பிரதேச சபை தற் போது மானிப்பாய் சிறிய திரையரங்கின் ஒரு பகுதியில் தலைமை அலுவலகத்தையும் ஆனைக்கோட்டை, மானிப்பாய், பண்டத் தரிப்பு, மாதகல் ஆகிய உப - அலுவலகங்க ளையும் கொண்டு மக்களுக்கு சேவை செய்து வருகின்றது.

மேற்படி பிரதேச சபைக்கு 2005-2006 காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட 'நீர்ப்' நிதி அசாதாரண சூழ்நிலையினால் மீளத் திரும் பியுள்ளது.

தற்போது 'நிக்கொட்' ஊடாக குடாநாட் டில் பல புதிய நிர்மானப் பணிகள் இடம் பெறுகின்றது. எனவே வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை விரைவில் புதிய நகரசபையாகத் தரமுயர்த்தப்படவும் -

பிரதேச துரித திட்டத்தின் வளர்ச்சி - அபிவிருத்தி அடையவும் 2008 நிக்கொட் -II திட்டம் ஊடாக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்து -தங்களது காலத்தில் இப் பாரிய பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் - என்றுள்ளது.

இக்கடிதம் மானிப்பாய் சத்திய சாயி சேவாநிலையத்தில் பாபாவின் அவதார தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபரிடம் நேரடியாகக் கையாளிக்கப்பட்டது. (202-95)

# வெங்காயம், மரக்கறிகளின் விலைகள் குடாநாட்டுச் சந்தைகளில் அதிகரிப்பு

குடாநாட்டு மரக்கறிச் சந்தைகளில் சின்ன வெங்காயம் மற்றும் மரக்கறி வகைகளின் விலை உயர்வடைந்துள்ளன.

இதுவரை நாள்களாகக் கிலோ 20 ரூபா தொடக்கம் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சின்ன வெங்காயம் தற்போது கிலோ 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

கந்தரிக்காய் கிலோ 160 ரூபாவாகவும் கோவா கிலோ 30 ரூபாவாகவும், வெண் டிக்காய் கிலோ 40 ரூபாவாகவும், பயிற் றங்காய் 160 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

பச்சை மிளகாய் கிலோ 120 ரூபாவாக வும் உருளைக்கிழக்கு 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. இதே வேளை - மரவள்ளிக்கிழங்கு கிலோ 10 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. (202-51)

# இலங்கை வங்கியின் சுன்னாகம், நெல்லியடிக் கிளைகள் வலைப் பின்னலுடன் இணையும்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் இலங்கை வங்கியின் சுன்னாகம், நெல்லிய டிக் கிளை களும் விரைவில் கணனி மயப்படுத்தப் படவுள்ளன. இதன் மூலம் இக் கிளைகள் நாடளாவிய ரீதியிலான வங்கியின் வலைப் பின்னலுடன் இணைக்கப்படுமென வங்கி யின் யாழ்.பிராந்திய செயற்றிட்ட முகாமையா ளர் ந. சீவரத்தினம் தெரிவித்ததார்.

நாட்டில் உள்ள 305 இலங்கை வங்கி கிளைகளில் பருத்தித்துறை கிளை 294 ஆவ தாகவும் மானிப்பாய் கிளை 295ஆவதாகவும் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள் நாட்டிலுள்ள அனைத்து இலங்கை வங்கி கிளைகளும் கணனி மயப் படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டுவிடும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-160)




# அறநெறி ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு அரச பாடசாலைகளில் நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.19

அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர் களை அரச பாடசாலைகளில் ஆசிரியர் களாக நியமிப்பதற்கு அரசாங்கம் நடவ டிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் அறநெறிப் பாடசாலைகளில் கடமையாற் றுபவர்களே அரச பாடசாலைகளில் ஆசி ரியர்களாகக் கடமையாற்ற நியமனம் செய் யப்படவுள்ளனர்.

மதக்கல்வியைப் பாடசாலைகளில் போதிப்பதற்கு நிலவிவரும் ஆசிரியர்க ளின் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்கு வேண்டிய அடிப்படைத் தகுதியைக் கொண்டவர்களிடம் இருந்து உரிய விண் ணப்பங்கள் கோரப்பட்டே இந்த நியமனங் கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நடவடிக்கையினால் மாகாண அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகள், மத்திய அரசின் கீழ் இயங்கும் பாடசா லைகளில் நிலவிவரும் மதக்கல்விக்கான ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமனம் செய்யப்படு பவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு உதவி ஆசிரிய பயிலுநர்களாக நியமனம் பெறு வார்கள் எனவும் குறிப்பிட்ட காலத்தில் பட்டப்படிப்பையோ டிப்ளோமாவையோ அன்றி ஆசிரிய கலாசாலை பயிற்சியையோ பூர்த்திசெய்ய வேண்டும்எனவும் கல்வி அமைச் சினால் தெரிவிக்கப்பட் டுள்ளது. (202-68)



யாழ்.பாலர் கல்விக் கழகத்தின் 41 ஆவது வருடாந்த கலை விழா அண்மையில் யாழ்.நாவலர்கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது. கழகத்தின் செயலாளர் திருமதி தெய்வநாயகி இரத்தினகோபால் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், கழகத் தலைவர் இராசையா ஸ்ரீதரன், பிரதம விருந்தினர் ஜீவானந்தம், கழக உப தலைவர் எஸ்.பி.காசிநாதன், கழகப் பொருளாளர் பொ.அதீசன் ஆகியோர் படத்தில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# தகவல் தொடர்பாடல் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பா ணம், வட்டுக்கோட்டை பயிற்சி நிலையங் களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற் கான பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரணதரத்தில் இரு தட வைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங் கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி யுடன் 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதே னும் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணி தம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங் களில் சித்தியுடன் ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் 2 பாடங்களில் சித்திபெற்ற 16-35 வய திற்குட்பட்டவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணப் பணிப்பாளர், NAITA இல.7, கோவில் வீதி, யாழ்ப்பா ணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கு மாறு வட மாகாணப் பணிப்பாளர் பொ.இராம

# சுழிபுரம் வைத்தியசாலைக்கு மருந்துகள் வந்துள்ளன

யாழ்ப்பாணம்,டிசெ.19

சுழிபுரம் இலவச ஆயுள்வேத வைத்திய சாலைக்குத் தேவையான ஆயுள்வேத மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

நீண்ட நாள்களாக மருந்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் வைத்தியசாலை நிர் வாகத்தினரும் நோயாளர்களும் சிரமப் பட்டனர்.

தற்போது மருந்துகள் வந்து சேர்ந்துள்ள தால் நோயாளர்கள் தமக்கு வேண்டிய மருந்

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட சுன் னாகம் நகேஸ்வரி வித்தியாலய அதிபர் பத விக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2. II, வகுப்பு III, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2,I, வகுப்பு 2,II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு எதிர் வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (202)

# யாழ்.நாவலர் வீதி பெரும் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.நாவலர் வீதி மிக மோசமாகச் சேத மடைந்துள்ளது. குறிப்பாக நாவலர் வீதி யும், கஸ்தூரியார் வீதியும் இணையும் சந்தி யில் வீதியில் குழிகளாகக் காணப்படுகிறது.

இதனால் தற்போது மழை நேரத்தில் பயணம் செய்வோர் குழிகளுக்குள் விழுந்து எழும்பவேண்டியும் ஏற்படுகின்றது.

மழை பெய்யும் வேளைகளில் வெள்ள நீர் குழிகளுக்குள் தேங்கி வீதியில் மேவி நிற்பதால் குழிகள் இருப்பதை அறியாது எழும்புவதைக் காணமுடிகின்றது.

இத்துடன் தனியார் மினி பஸ்களும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகளும் சந்தியில் தரித்து நின்றே பயணிகளை ஏற்றிச் செல் லும் நிலைமையும் காணப்படுகின்றது.

இத்தகைய செயற்பாடுகளினால் சன நடமாட்டம் கூடிய நண்பகல் வேளைக ளில் இந்த வீதியூடாகப் பயணம் மேற்கொள் வதில் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாகப் பயணிகள் விசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் சுகாதார ஊழியர் நிலை

வடக்கு மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கல்வித் திணைக்களம், பிராந்திய மாகாண சுகாதார திணைக்களம், விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் போன்றவற்றுக்கு சமனான திணைக்களங்களில் உள்ளூராட்சி மன்றங்களும், சபைகளும் அடங்கும். குறித்த திணைக்களங்களில் பணியாற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது பணியாற்றுகின்றார்கள்.

மேற்குறித்த திணைக்களங்களில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் அவர்களின் சேவைக்காலங்களுக்கேற்ப தரமுயர்த்தப்பட்டு, பதவிஉயர்வும் வழங்கப்பட்டு, அதற்கான வேதனங்களும் வழங்கப்பட்டு வருகின்றனர். உதாரணத்திற்கு யாழ்.பிராந்திய மாகாண சுகாதார திணைக்களத்தில் 10 வருடங்களுக்கு முன் சுகாதாரத் தொழிலாளியாக நியமனம் பெற்றவர்கள் தற்போது விடுதி தொழிலாளி, பரிசாரகர், சமையலாளர், காவலாளி, காரியாலய காரியசகா போன்ற பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளனர். இதற்குக் கல்வித்தகமை அடங்காது அவர்களின் சேவைக்காலங்களுக்கு ஏற்ப பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. இதேபோல் கல்வித் திணைக்களங்களிலும் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் சேவைக்காலங்களுக்கேற்ப தரமுயர்த்தி (தரம் II, தரம்I) அதற்கான வேதனங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவை அனைத்தும் வடக்கு மாகாண ஆணையாளரின் பணிப்பின் பிரகாரம் நடைபெறுகின்றது. இதேபோல் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் மாநகர, பிரதேச, நகர சபைகளில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வழங்கலாம். சுற்று நிருபம் என்பது சகலருக்கும் பொருந்தும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பணியாற்றும் சிற்றூழியர்களுக்கு இப்படியான எந்தவித சலுகையும் வழங்கப்படுவதில்லை. தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பணியாற்றும் நூற்றுக்கணக்கான சுகாதாரத் தொழிலாளர்கள் 20 வருட சேவைக்காலத்தைக் கடந்தும் எந்தவிதமான தரமுயர்த்தலோ, பதவிஉயர்வோ வழங்கப்படவில்லை. 2005ஆம், 2006ஆம் ஆண்டுகளுக்கான வேதன ஏற்றங்கள் வழங்கப்படவில்லை. குறித்த காலங்களுக்கு சம்பள ஏற்றம் வழங்காததற்கான காரணங்கள் எந்தத் தொழிலாளிக்கும் தெரிவிக்கப்படவில்லை. திணைக்களத் தலைவர்களிடம் கேட்டால் சம்பள எல்லையை அடைந்துவிட்டீர்கள் என்று சொல்கின்றார்கள். இவர்களின் அசட்டையான பதிலால் தற்போது நூற்றுக்கணக்கான சுகாதாரத் தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளார்கள். சம்பள எல்லையை அடைந்த சுகாதாரத் தொழிலாளர்களுக்கு 2006/06 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிர




காரம் அவர்களின் சேவைக்காலத்திற்கேற்ப தரமுயர்த்தி சம்பள உயற்சியும் வருடாந்த சம்பள உயற்சியும் வழங்க முடியும் என்று உள்ளது. இதனை யாழ்ப்பாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஓர் அதிகாரி ஊடாக எமக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களின் திணைக்களத் தலைவர்கள் இவற்றை ஏன் செய்ய மறுக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. வடக்கு மாகாண சபை ஊழியர்கள் என்ற வகையில் மாகா ணத்திற்குட்பட்ட எந்தத் திணைக்களத்தில் பணிபுரியும் சுகாதாரத் தொழிலாளியாக இருந்தாலும் ஒரே சம்பளம்பெற வேண்டும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் மேற்குறித்த திணைக்களங்களில் பணியாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் சம்பளங்களில் சரியான வித்தியாசம் தெரிகின்றது. இவற்றை நிவர்த்தி செய்ய வடக்கு மாகாண அரசு ஓர் ஆணைக் குழுவை நியமித்து நிவர்த்தி செய்யுமா?

- தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கீழ் இயங்கும் சபைகளுக்கு புதிய காரியாலய காரிய சகா, நூலக சேவகர், ஆயுள்வேத மருந்துக் கலவையாளர் போன்றவர்களுக்கு க/பொ/த தரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்க முடியுமாம். இந்தச் சிற்றூழியர்களின் கதி என்ன? இவர்களின் சேவைக்காலத்தை கருத்திற்கொண்டு இந்தப் பதவி உயர்வுகளை வழங்கலாம் அல்லவா, வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் வேறு திணைக்களங்களில் இப்படியான பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

மேற்படி சிற்றூழியர்களின் பிரச்சினை வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு, வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்.மாநகர ஆணையாளர், பிரதேச, நகரசபைச் செயலாளர்கள் அனைவருக்கும் சமர்ப்பணமாகட்டும். மாகாண அரசு இது சம்பந்தமாக ஆராய ஒரு குழுவை நியமித்தால் இத்தொழிலாளர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணலாம்.

**பாதிக்கப்பட்ட சுகாதார ஊழியன்.**

---

## ஆண்டு மூன்றாகியும் நீண்டு செல்லும் நினைவுகளில்.....!

மலர்ந்து மண்ணில் 21 ★ 10 ★ 1991



உதிர்ந்து விண்ணில் 19 ★ 12 ★ 2004

*'இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்கு சொல்கிறேன்'* *லூக் 23:43*

### செல்வி தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி

(மாணவி, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

*வண்ணநிலவாய் வலம் வந்த மின்மினியே.....!*
*வாசமலராய் நாம் மகிழ்ந்த இதழ் முகமே.....! எம்*
*எண்ணமெலாம் நிறைந்திருந்த வண்ணச் சிறுகிளியே.......!*
*ஏற்றம் பல காண்பாய் என்றெண்ணி அக மகிழ்ந்தோம்*
*எதிர்பாரா நொடியதிலே எமைப் பிரிந்தாய், ஏங்கவைத்தாய்*
*கண்மணியே! கலங்குகின்றோம் நிதம் நினைந்து......!*

நின் பிரிவால் நிதம் வாடும்:
**அப்பா, அம்மா, தம்பி.**

பழைய பொலிஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு.

தகவல்: பொ.தபேந்திரராஜா *(தந்தை).*

(65970)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கணேசமுத்துநாதன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் EXXEX ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கணேசமுத்துநாதன் (ஓய்வுபெற்ற கணக்காளர்- FORD MOTOR CO.,U.K.), ஞாயிற்றுக்கிழமை 16.12.2007 லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களாகிய சின்னத்துரை- சேதுப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன், விமலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. கிருஸ்ணவேணியின் மாமனும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், புவனேஸ்வரி, சத்திய பாலதேவி, சரஸ்வதி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற ரெட்ணதுரை, காலஞ்சென்ற செல்லத்துரை, செல்வரெட்ணம், நாகலிங்கம், நடராஜா, Dr.நவரெட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பொன்னம்மா, பராசக்தி, ஜெயசிறீ ஆகியோரின் சகலனும் ரெட்ணகுமாரி, ஜெயக்குமாரி, சத்தியகாந்தன், சிவதொண்டன், ராஜாத்தி, செல்வக்குமாரி, செல்வக்குமார், சக்திராஜ், பார்த்திபன், ராகவன், மதன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் பத்மலதாவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை 20.12.2007 லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக கிழக்கு லண்டனில் உள்ள Upminister மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66, PORCHESTER ROAD,
BILLERICAY,
EXXEX,
CM120UQ,
U.K.,
0441277658641.

அம்மன் கோவிலடி,
அரி, கரவெட்டி.

தகவல்:
**ப.பத்மலதா.**

(சி/54750)

## மனிதனை மனிதனாக வாழவைக்க நாடகத்துறை பயன்படவேண்டும்

### நூல் வெளியீட்டு நிகழ்வில் கலாநிதி கலாமணி

பருத்தித்துறை,டிசெ.19

''சமூகத்தில் விழிப்புணர்வுகளை இலகுவாக ஏற்படுத்தி மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு நாடகத்துறை பயன்படவேண்டும். நாடகத்துறை நன்கு வளர்ச்சியடைவதற்கு நாடக ஆசிரியர்களும் நெறியாழ்கையாளர்களும் சிறப்பாகச் செயற்படவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரி ஆசிரியர் பா.ரகுவரனின் ''கல்லூரி நாடகங்கள்'' (ஆறு நாடகங்களின் தொகுதி) நூல் வெளியீட்டு விழாவிலே வெளியீட்டுரையை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ரீ.கலாமணி குறிப்பிட்டார்.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபத்திலே நடைபெற்ற இந் நூல் வெளியீட்டு விழாவுக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமை தாங்கினார். மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் எம்.கல லிங்கம் நூல் அறிமுக உரை நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை விழாவின் பிரதம விருந் தினரான பிரபல எழுத்தாளர் தெணியானிடமிருந்து இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் கே.பால சுப்பிரமணியம் பெற்றுக் கொண் டார்.

நூல் வெளியீட்டுரையில் கலாநிதி கலாமணி மேலும் கூறுகையில்,

நூலாசிரியர் இரகுவரன் மரபுக் கலைகளில் பெற்றுள்ள தேர்ச்சி, அவற்றின் கூறுகளை இவரது நவீன நாடகங்களில் காணக் கூடியதாக உள்ளது. இதுவே இவரின் நாடகங்களின் வெற்றிக்கும் சிறப்புக்கும் காரணமாய் அமைந்திருக்கின்றது.

இவரது ''அழிதல் காணும் பூவுலகம்'' நாடகத்தில் அமெரிக்காவின் வருகையும் 'முற்றத்து வேம்பு' நாடகத்தில் மரம்தறி வீரன் வருகையும் மரபு வழி நாடங்களில் உள்ளது போல வரவுப்பாட்டாக அமைந்தி ருப்பது சிறப்பம்சமாகும்.

நாடக ஆசிரியரும் மாணவர்களும் நட்புரிமையுடன் பழகுவதை நாம் அவதானிக்க முடிகிறது. நாடகப் பயிற்சிகள் மூலம் கூச்ச சுபாவமுள்ள மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்து வதைக் காணும் போது மிக ஆச்சரியமாகவுள்ளது. இவரது நாடகக் கலை யின் வலிமை மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றது- என்றார்.(ப)

## ஏகாதசித் திருவிழா

யாழ்ப்பாணம், டிசெ.19

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசித் திருவிழா நாளை வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.

அதிகாலை 3.45 மணிக்கு சுப்ரபாதம் 4 மணிக்குத் திருப்பள்ளியெழுச்சி 4.15 மணிக்கு மூலவர் அபிஷேகம் 5.15 மணிக்கு திருவணந்தல் பூசை, திருப்பாவை ஓதுதல் 5.45 மணிக்கு உதய பூசை என்பன இடம்பெற்று காலை 6 மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனம் இடம்பெறும். இதன்போது சுவாமி வசந்த மண்டபத்தில் எழுந்தருளுவார்.

தொடர்ந்து காலை 9 மணிக்கு மூலவர் அபிஷேகம் முற்பகல் 10.15 மணிக்கு காலை சந்தி பூசை என்பன இடம்பெற்று 10.45 மணிக்கு ஆதி வேங்கடேசர் உள்வீதியுலா வருவார்.

பி.ப. 4 மணிக்கு சாயரட்டைப் பூசை, 4.15 மணிக்கு இரண்டாம் காலப் பூசை, 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை துவாதசி திருவிழா இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ.19

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி திருவிழா நாளை வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8 மணிக்கு அபிஷேகம், முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரேறி வீதியுலா வருவார். மாலை 6 மணிக்கு சாயங்காலப் பூசை இடம் பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு அர்த்தசாமப் பூசை பின்னிரவு 2 மணிக்கு 1008 சங்காபிஷேகம், அதிகாலை [illegible] என்பன இடம்பெற்று 5 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கலாவதி ஜெகதீஸ்வரன்



மலர்வு: 27.10.1961 உதிர்வு: 05.01.2001

*திதி: தசமி 19.12.2007*

அன்பு மகளே! தெய்வமே!
எங்கள் நெஞ்சிருக்கும் வரைக்கும்
உமது நினைவு எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது நினைவுகளுடன்:
**அப்பா, அம்மா, குடும்பத்தினர்.**

*அரச வீதி, உரும்பிராய் கிழக்கு.*

(69098)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1925



மறைவு 19 . 11 . 2007

### திருமதி இராமசாமி சிவக்கொழுந்து

*திதி: தசமி 19.12.2007*

எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய
எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆன்மா அரனடியில்
சாந்திபெற எல்லாம் வல்ல
ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அம்பிகா ஸ்ரோர்ஸ்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(69097)

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதில் முன்னிற்கும் ஆனைக்கோட்டை குணபாலன் வித்தியாசாலை

எமது பாடசாலையில் கல்விபயிலும் பிள்ளைகளின் பெற்றோர்களில் யாரும் அரச உத்தியோகத்தர்களாக இல்லை. மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளே பெருமளவில் கல்வி பயில்கின்றார்கள். எமது பாடசாலையில் கல்வி பயின்று முன்னேறும் பிள்ளைகள் பின்னர் அயலில் உள்ள பிரபல பாடசாலைகளால்


பாடசாலை பான்ட் வாத்தியக் குழுவினருடன் அதிபர், ஆசிரியர்கள்

கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். அவ்வாறு செல்லும் பிள்ளைகளுக்கே எவ்வித முட்டுக்கட்டைகளும் இல்லாமல் பாடசாலை விடுகைப் பத்திரத்தை வழங்கி வருகிறேன்.

இவ்வாறு தெரிவிக்கிறார் ஆனைக் கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலய அதிபர் ந.தனபாலசிங்கம்.

இப்பாடசாலை சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது. தரம் - 1 முதல் தரம் - 9 வரையான வகுப்புக்கள் இங்கு உள்ளன. தரம் - 9 வகுப்பு கடந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப் பட்டது. தற்போது ஆண்கள், பெண்கள் என மொத்தம் 138 மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றார்கள்.

பாடசாலை அமைந்துள்ள சுற்றாடலில் உள்ள மாணவர்களில் மிகக் குறைவானோரே இங்கு கல்வி பயில்கிறார்கள். அயல் கிராமங்களில் உள்ள மிக்வும் வறிய மாணவர்கள் இங்கு கூடுதலாகக் கல்வி பயில்கிறார்கள். அதிலும் சாவற்கட்டு, முள்ளி ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களே மிக அதிகம்.

பாடசாலைச் சுற்றாடலில் உள்ள மாணவர்கள் வேறு பாடசாலைகளில் கல்வி பயில்கின்றபோதும் அவர்களின் பெற்றோர்கள் இந்தப் பாடசாலைக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.

கொழும்பில் வாழும் பாடசாலை நலன் விரும்பியான கொக்குவிலைச் சேர்ந்த எஸ்.சுப்பிரமணியம் என்பவர் வருடாந்தம் பாடசாலைக்கு உதவிகளைச் செய்து வருகின்றார். அத்து டன் பழைய மாணவர் களின் உதவியுடன் சிறுவர் பூங்கா அமைப்பு, விளை யாட்டு மைதானத்துக்கான காணிக் கொள்வனவு, பார் வையாளர் மண்டபம் அமைத் தல், மதில் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா 'பாண்ட்' வாத்தியக் கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம் பரநாதனும்

## மாணவர்களின் திறமையான கல்விக்கு பெற்றோரின் பங்களிப்பு அவசியமானது

உதவிகளை வழங்கியுள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம், கல்வித் திணைக்களம் ஆகியன வழங்கிய நிதியுதவி மூலம் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப் பட் டுள்ளது. எனினும் முன்னர் இருந்த கட்டடங்களில் கூரைகள் பழுதடைந்

-பவித்திரன் -

துள்ளமையால் மழைகாலத்தில் மாணவர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றார்கள். அத்துடன் இங்கு தளபாடங்களும் பற்றாக்குறையாக உள்ளன. இதனால் மாணவர்களின் வசதியான கற்றல் பாதிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை பற்றாக்குறை இல்லை. மாணவர் களில் கற்றல் நடவடிக்கைகளுக்குப் போதிய திறமையான ஒத்துழைப்பை ஆசிரி யர்கள் வழங்கி வருகின்றார்கள்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றி வருகின்றார்கள். கோட்ட, வலய மட்டங்களில் இடம்பெறும் பல்வேறு போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றியுள்ளார்கள். அத்துடன் தமிழ்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள் என்பவற்றிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்து கிறார்கள். கடந்த மாதம் ஆனைக் கோட்டை சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் செல்வி மு.அஜிதா என்ற மாணவி முதலாம் இடத்தைப் பெற்றுள் ளார்.

மாணவர்களின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவ தில்லை. இதன் காரண மாகச் சில பிள்ளை களில் அடைவு மட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.




மாணவர்களின் கல் விக்கு பெற்றோர்களிடையே தோன்றும் முரண்பாடுகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கற்பித்தல் செயற்பாட்டில் பெற்றோர்களின் பங்களிப்பும் ஓரளவுக்குக் கிடைக்குமாக இருந்தால் இந்த மாணவர்களையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியும்.

இப்பாடசாலையை சுற்றிச் சண்டிலிப்பாய் கல்விப் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுடன் நல்லூர், யாழ்ப்பாணம் கல்விகோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளும் அமைந்துள்ளமையால் எமது பாடசாலையின் வளர்ச்சி மந்த கதியிலேயே நடைபெறுகின்றது.


பாடசாலை முகப்புத் தோற்றம்

குறிப்பாக திறமை காட்டும் மாணவர்களை இப்பாடசாலையில் இருந்து ஏனைய பாடசாலைகள் உள்வாங்கிக் கொள்கின்றன.

இப்பாடசாலையில் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கான நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக முன்னாள் கல்விப் பணிப்பாளர் அமரர் ரட்ணராசா ஞாபகார்த்தமாகவும், வைத்தியர் சிவபாலனாலும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாட்டை அவருடன் இணைந்து ஆசிரியர்களும் அக்கறையுடன் முன்னெடுத்து மாணவர்களின் கல்விக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களை முன்னேற்றி வருகின்றார்கள்.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கிணங்க இப்பாடசாலை குறிப்பிட்டளவு மாற்றத்தை கடந்த இரண்டு வருடகாலத்தில் பெற்றுவருவதாக அயலில் உள்ள பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். *

## ஆசிரியரது கடமைகளும், பொறுப்புக்களும்

ஆசிரியர்களுக்கென்று முக்கியமான சில கடமைகள் உண்டு. இந்த வகையில் தம்மிடம் கற்கும் மாணவர்களை நன்கு கற்றவர்களாக, கட்டுப்பாடு உடையவர்களாக, தேசிய உணர்வுடையவர்களாக உருவாக்குவது ஒரு நல்ல ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அவர்களுடைய அறிவுசார், உடலியல், உளவியல், ஆத்மீக, சமூகத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேலும் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது மட்டுமல்லாது பொருத்தமான நெறியில் வழி நடத்துவதும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். மாணவர்களை வழி நடத்திச் செல்வதற்கு ஆசிரியர்களிற்கு சில ஆளுமைப் பண்புகள் அவசியமானதாகும். அந்த வகையில் பிஞ்சு உள்ளங்களை தன்பால் ஈர்க்கும் வன்மை, அவற்றின் பால் தமது உள்ளம் நெகிழும் மென்மை, இனிமையாக உரையாடும் திறன் என்பன அமைய வேண்டும்.

ஓர் ஆசிரியருடைய செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க கடமைகளில் இன்னோர் அம்சம் பாடசாலை சார்பானது. தான் கற்பிக்கும் பாடசாலையில் தனக்கென ஒதுக்கப்படும் வேலைகளை ஒழுங்காகவும், கிரமமாகவும், சிறப்பாகவும் செய்வது அவரு டைய முக்கிய பொறுப்பாகும். இப் பொறுப்பினை ஓர் ஆசிரியர் எந்தளவிற்கு உணர்ந்து நிறைவேற்றுகின்றார் என்பதைப் பொறுத்தே அவருடைய பணி அளவிடப்படுகின்றது. அந்த அளவீட்டின் அடிப்படையிலேயே பாடசாலையிலும் அதனை சுற்றியுள்ள சமுதாயத்திலும் அவருக்கு இருக்கும் மதிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

ஓர் ஆசிரியர் தான் பணிபுரியும் பாடசாலையுடன் தன்னை இணைத்து இனங்கண்டு கொள்வது மிகவும் அவசியமானதாகும். ஆசிரியர்களுடைய பணி சிறப்பாகப் பயணிக்க வேண்டுமானால் அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே நெருக்கமும், புரிந்துணர்வும் இருத்தல் வேண்டும். இவ்விதமான நெருக்கமும், புரிந்துணர்வும் ஆசிரியர்களுடைய பணியை இலகுவாக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே மாணவர்களின் விருப்பத்தில் கவனம் செலுத்தும் ஆசிரியர் அவர்களுடைய பெற்றோர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு மாணவர்களின் முன்னேற்றத்தினை தொடர்ந்து அவதானிப்பதற்கு உதவுவதாகும். பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பெற்றோர்கள் அறிந்துகொள்வதற்கும் அதன் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யப் பெற்றோரைத் தூண்டுவதற்கும் இத்தகைய தொடர்புகள் துணைபுரியும். பெற்றோர்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதன் மூலம் பாடசாலைக்குத் தேவையான பலமான அத்திவாரத்தையும் ஏற்படுத்தலாம். இப்படி அல்லாது பெற்றோரை உதாசீனம் செய்து நடந்து கொண்டால் பாடசாலை அதன் அடித்தளத்தில் ஆட்டம் கண்டு விடும்.

பொதுவாக நோக்கும்போது ஆசிரியத்துவம் ஆனது ஒரு கலையாகக் கருதப்பட்டாலென்ன அல்லது நுணுக்கங்கள் நிறைந்த ஒரு தொழிற்துறையாகக் கொள்ளப்பட்டாலென்ன அதன் மனிதவியற் தன்மை தெளிவாகிறது. எனவே அதன் முக்கிய செயற்பாடு தொடர்பு கொள்ளுதல் ஆகும். இங்கு ஒருவர் ஒரு பாடத்தை சிறப்பாகக் கற்பிக்கின்றார் என்று கூறின் அங்கே யாரோ ஒருவரேனும் கற்றிருக்க வேண்டும், இல்லையேல் அதனைக் கற்பித்தல் என்று கூறமுடியாது. இவ்வகையில் கற்பித்தல், கற்றல் இரண்டும் பிரிக்க முடியாத பின்னிப் பிணைந்த செயற்பாடுகளாகும். இதன் நுணுக்கங்களையும் வளர்ச்சிகளையுமே வகுப்பறை அனுபவத்தின் மூலம் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

ஆசிரியர்: திருமதி த. அகிலன்,
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.


நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் 14 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி கோட்ட மற்றும் வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. பாடசாலை அதிபர் ஜி.செபஸ்ரியாம்பிள்ளை, உப அதிபர் என்.நகுலநாதன், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் த.சிவசோதி, நாவாந்துறைப் பங்குத்தந்தை அருட்திரு.எம்.ரவிச்சந்திரன், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு.ஏ.றொபின்சன் ஆகியோருடன் அணியினர் எடுத்துக்கொண்ட படம் இது.


இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பும் பெற்றோர் தினமும் அண்மையில் இடம்பெற்றன. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி விமலா கந்தையா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி இக்னேசியா, பிரதி அதிபர் திருமதி சத்தியவாணி கிறிஸ்ரி ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்திய சேவை

புங்குடுதீவில் இயங்கும் கமலா வைத்திய சாலை இன்று (19.12.2007) புதன்கிழமை முதல் தினமும் காலை 8.30 - பி.ப. 2 மணி வரை இயங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

(69081) நிர்வாகி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**வைத்திலிங்கம் சரஸ்வதி**
(பாப்பி ரீச்சர்)

தோற்றம் 08-01-1928 மறைவு 19-11-2007

திதி: பூர்வபக்க தசமி

*அன்பின் திருவுருவே ஆசை பாப்பி அம்மா!*
*பாசத்திற்காக நாமெல்லாம் தவமிருக்க*
*எம்மைப் பாதிவழியில் பரிதவிக்கவிட்டு போனாயோ!*
*ஆறுதல் இல்லையம்மா எமக்குப் பாரினில்*
*அன்பு வார்த்தையும் இல்லையம்மா*
*நீங்கள் தினமும் அன்பாக அழைத்திடுவது இன்றும் காதில் கேட்குதம்மா!*
*நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'தம்பலத்தனை', துன்னாலை வடக்கு. இ.திலகேஸ்வரி (அன்புப் பெறாமகள்). (68964)

## மீள் கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - *2008*

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2008ஆம் திகதி முதல் 31.12.2008ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகிறது.

கேள்விப்பத்திரக்கட்டணம் (வற்வரி நீங்கலாக) ரூபா 400/=

கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி: 18.12.2007 தொடக்கம்
கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல்: 27.12.2007 நண்பகல் 12 மணி வரை
கேள்வி திறத்தல்: 27.12.2007 2.30 மணிக்கு

குறிப்பு:-மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் 10.11.2007 திகதிய உதயன் பத்திரிகையிலும், வலம்புரி பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட குறிப்புக்களில் 5ஆவது குறிப்பு நீங்கலாக ஏனைய குறிப்புகள் இதற்குப் பொருந்தும்.

| தொட. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | குருநகர் சந்தை | 10,000.00 | 1,088,819.00 |
| 02 | செங்குந்தா சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் நீங்கலாக) | 10,000.00 | 573,545.00 |
| 03 | பாசையூர் சந்தை | 2,500.00 | 49,875.00 |
| 04 | புங்கங்குளம் சந்தை | 2,000.00 | 3,465.00 |
| 05 | கொழும்புத்துறை சந்தை | 1,000.00 | 17,325.00 |
| 06 | அரியாலைச் சந்தை | 1,000.00 | 80,851.00 |

| தொட..இல | இறைச்சிக்கடைகள் | | | |
|---|---|---|---|---|
| 01. | பண்ணைக்கோழிக்கடை | இல.07 | 5,000 | 44,756 |
| 02. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000 | 195,038 |
| 03. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000 | 37,800 |
| 04. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000 | 170,100 |
| 05. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000 | 118,650 |
| 06. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000 | 75,075 |
| 07. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000 | 69,300 |
| 08. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000 | 69,300 |
| 09. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000 | 69,300 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000 | 69,300 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000 | 69,300 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000 | 69,300 |
| 13. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000 | 10,500 |
| 14. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.11 | 2,000 | 10,500 |
| 15. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 2,000 | 10,500 |
| 16. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000 | 386,930 |
| 17. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000 | 232,328 |
| 18. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000 | 173,250 |
| 19. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000 | 199,134 |
| 20. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000 | 248,036 |
| 21. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000 | 257,276 |
| 22. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000 | 93,093 |
| 23. | நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000 | 288,750 |
| 24. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000 | 117,285 |
| 25. | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | | 5,000 | 33,148 |
| | துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | | | |
| 01. | செங்குந்தா சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | | 2,500 | 40,000 |

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*17.12.2007* (69547381)

*மாநகர ஆணையாளர்,*
*மாநகரசபை, யாழ்ப்பாணம்.*


**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69074)

**மலிவு விற்பனைக்கு**

கோழித்தீன், கருவாட்டுப் பவுடர்
A. ஈசன்,
No.34, புங்கங்குளம் றோட், ஈச்சமோட்டை.
தொடர்பு: 021 222 6504
தொடர்புகொள்ளும் நேரம்: 9A.M. - 3.30P.M. (69093)


## சைவத் திருமுறை விழா

நவாலி,டிசெ.19

ஆனைக்கோட்டை இந்து சமயவிருத்திச் சங்க சைவத்திருமுறை விழாவும் சைவசமய செயற்பாட்டு விழாவும் அண்மையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற பூசை வழிபாட்டைத் தொடர்ந்து திருமுறைச் சுவடிகள் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரால் விழா மண்டபத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மூத்தநயினார் ஆலய பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ.க.கிருஸ்ணேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரையை பாலசுப்பிரமணிய பாடசாலை அதிபர் ந.சிவகடாச்சமும் வரவேற்புரையை திருமதி ந.சந்திரகுமார் ஆசிரியரும் சிறப்புரையை வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரனும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(202-100)

## மரக்கன்றுகள் நடுந்திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நீர்வேலி - கைதடி வீதியில் 75 மரக்கன்றுகளை நடுவதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை திட்டமிட்டுள்ளது.

இவ்வீதியில் மரக்கன்றுகள் நடுவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும், மரநடுகை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நடந்துமுடிந்த உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்களில் 80 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-160)

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
### சுவர்க்கவாயில் ஏகாதசி
### நாகேஸ்வரம் - அளவெட்டி



மெய்யன்புடையீர்,

நாளை (20.12.2007) வியாழக்கிழமை பின்வரும் விழாக்கள் இடம்பெறும். அன்படியார் அனைவரும் வந்து தரிசித்து திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

**நிகழ்வுகள்**

**20.12.2007 வியாழக்கிழமை**
காலை 8.00மணி அபிஷேகம்
காலை 10.00மணி வசந்தமண்டபப்பூசை.
காலை 11.00 மணி எம்பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.
மாலை 6.00மணி சாயங்காலப் பூசை

**21.12.2007 வெள்ளிக்கிழமை**
நள்ளிரவு 12.00 மணி அர்த்தசாமப் பூசை
அதிகாலை 2.00 மணி 1008 சங்காபிஷேகம்
அதிகாலை 4.00மணி வசந்தமண்டபப்பூசை
அதிகாலை 5.00மணி தீர்த்தோற்சவம்

**இசைக் கச்சேரி:**
பாட்டு : S.ஞானசொரூபன் (இளவாலை மெய்கண்டான் இசைஆசிரியர்)
வயலின் : செல்வி.வரதராஜசர்மா
மிருதங்கம் : ந.சதீஸ்குமார்
தபேலா : S.முருகையா

**சொற்பொழிவு:**
வை.விஜயபாஸ்கரன் (மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்)
நி.பாஸ்கரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**மங்கள வாத்தியம்:**
கலாபூஷணம் V.K.கானமூர்த்தி அவர்களும் புதல்வர் V.K.K.கிருஷ்ணதாசன் குழுவினரும்.

நாகேஸ்வரம் - அளவெட்டி. பொ.ப.சபை

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்

அன்னை மடியில் 17 ★ 01 ★ 1923



இறைவன் அடியில் 29 ★ 12 ★ 2006

**அமரர் சின்னத்துரை நவரத்தினம்**
(ஆயுள்வேத வைத்தியர், கோப்பாய்)
திதி: பூர்வபக்க தசமி

அன்பும் பண்பும் அடைமழைபோல் அணைதிரண்டோட
எம்மைப் பேணிக் காத்துஅரவணைத்து
எம் உயர்வுக்காய் உழைத்து ஒளியூட்டிய அணையா விளக்கே!
எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவே!
சைவமும் தமிழும் தலைநிமிர்ந்து ஓங்கவும் அயராது பாடுபட்டு
பார்ப்பவர் கண்களெல்லாம் பண்புள்ள தமிழனாகவும் பேரோடும் புகழோடும்
பெருமையாய் வாழ்ந்து பிறர் துயர்கண்டு உறுதுணை நல்கிய நவரத்தினமே!
ஆண்டொன்று கடந்தது... அப்பா! ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன
ஆறுதல் அளிக்க நீங்கள் இல்லையே அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பு முகத்தையும்
பசுமையான நினைவுகளையும் எங்களால் மறக்க முடியவில்லையே அப்பா!

என்றும் உங்கள் பாதையில் நடப்போம். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

V.T.S.றோட்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (69078)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.


## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% Off

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேடபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 21/12/2007
Batch II : 22/12/2007
Batch III : 23/12/2007
Batch IV: 26/12/2007
09.00 AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்துடனான 3ஆவது டெஸ்ட்

# முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 147-4


காலி, டிச.19

இங்கிலாந்து அணிக்கெதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்று தொடர்ந்தும் நம்பிக்கை தருகிறார்.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இலங்கை அணியில் காயமடைந்துள்ள டில்கார பெர்னாண்டோவிற்குப் பதிலாக வெலிகெதர டெஸ்ட் அரங்கில் அறிமுகமானார்.

இலங்கை அணியின் ஆரம்பவீரராக தரங்க, வன்டோட் ஆகியோர் களமிறங்கினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 34 ஓட்டங்களைச் சேர்ந்திருந்த நிலையில் வன்டோட் 18 ஓட்டங்களுடன் சைட் பொற்றமின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். தொடர்ந்து ஹார்மிஸனின் பந்துவீச்சில் தரங்க (16), எல்.பி.டபிள்யூ ஆனார். அப்பொழுது அணி 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

3ஆவது விக்கெட்டில் சங்ககார, மஹேல ஆகியோர் ஜோடி சேர்ந்து அணியைத் தூக்கி நிறுத்தினர். இந்த ஜோடி தம்மிடையே 88 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் ஹார்மிஸனின் வேகம் மீண்டும் மிரட்டியது. இவரது பந்துவீச்சில் சங்ககார 46 ஓட்டங்களுடன், அடுத்து வந்த சமர சில்வா ஓர் ஓட்டத்துடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்



டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 31ஆவது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்த மஹேல ஜெயவர்த்தனவும் (51), டில்சானும் (7) களத்தில் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

நேற்றைய ஆட்டம் மழைகாரணமாக இரு மணித்தியாலங்களுக்கு தாமதமாகவே ஆரம்பமானது. அதேபோல் இடையிடையேயும் மழையின் குழப்பல்கள் தொடர்ந்திருந்தன. இதனால் நேற்று 35 ஓவர்கள் வீசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.

# வசைபாடி வெல்வது கும்ளேயிடம் செல்லாது

## இப்படிக் கூறுகின்றார் ஆஸி. அணியின் முன்னாள் பயிற்சியாளர் புச்சானன்

சிட்னி, டிச.19

வசைபாடுவதன் மூலம் எதிரணியின் கவனத்தைச் சிதறடித்து வெற்றியை ஈட்டும் ஆஸ்திரேலிய அணியின் தந்திரம் இந்த முறை கும்ளேயிடம் செல்லாது என ஆஸி. அணியின் பயிற்சியாளர் புச்சானன் தெரிவித்துள்ளார்.

''அணித்தலைவர்களை வசைபாடி அவர்களது கவனத்தைச் சிதறடிப்பதில் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு நிகர் யாரும் இல்லை. ஹைசைன், சிமித், மற்றும் பிளின்ரொப் ஆகியோரை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இம்முறை கும்ளேயிடம் இது செல்லாது.'' - இவ்வாறு முன்னாள் பயிற்சியாளர் புச்சானன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

''அணித்தலைமைப் பதவிக்கு கும்ளே சரியான தேர்வு. மிகுந்த மனஉறுதி உடையவர். சச்சின், கங்குலி ஆகியோர் உட்பட இளம் வீரர்களின் மரியாதையைப் பெற்றுள்ளார். அணியை வழி நடத்திச் செல்லும் கும்ளேயின் திறமைக்கு இத்தொடர் சோதனையாக அமையும்.'' - என்றார்.

கும்ளேயின் தெரிவு குறித்து இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜோன் ரைட் கூறுகையில், ''கும்ளே தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர். கடைசி வரை மனம் தளராத குணம் கொண்டவர். ஆக்ரோச ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்.'' - என்றார்.

கும்ளேயின் செயற்பாடு குறித்து கருத்துக் கூறிய சுனில் கவாஸ்கர்,

''இந்திய அணியின் ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணம் விரைவில் தொடங்க உள்ளது. இத்தொடரில், அணித்தலைவராகச் செயற்படும் கும்ளேவை பொறுத்தே இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு அமைந்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அவர் எடுத்த சில முடிவுகள் சரியாக அமைந்தன. எனினும், பாகிஸ்தானை விட ஆஸ்திரேலிய அணி பலம் வாய்ந்தது. இதனால், கும்ளேவின் தலைமைக்கும் திறமைக்கும் இத்தொடர் மிகுந்த சவாலாகவே இருக்கும். கும்ளே உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு இதுவே கடைசி ஆஸ்திரேலியப் பயணமாக இருக்கும். இதனை வெற்றியுடன் நிறைவு செய்ய அனைவரும் விரும்புவர். ஆஸ்திரேலிய அணியை வீழ்த்துவதற்கான தகுதிகள் இந்திய அணிக்கு உள்ளன.'' - என்று கூறினார்.

# பிபாவின் சிறந்த வீரராக ஹாகா

லண்டன், டிச.19

நடப்பு ஆண்டிற்கான உலகத்தின் சிறந்த உதைபந்தாட்ட வீரராக பிரேசில் அணித்தலைவர் ஹாகா, சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் (பிபா) தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஏசிமிலன் கழக அணிக்குத் தலைமை தாங்கிவரும் ரிக்காடோர் ஹாகா, நடப்பு ஆண்டில் தனது அணிக்குப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அணியை வெற்றிநோக்கி நெறிப்படுவதற்காக தனது பங்கிற்கு 10 கோல்களையும் அவர் இந்த ஆண்டு சேர்த்துக் கொடுத்துள்ளார். இவரின் சிறப்பான செயற்பாடுகள், அவருக்கு உதைபந்தாட்ட உலகின் உயரிய விருதான நடப்பு 'ஆண்டிற்கான பிபாவின் சிறந்த வீரருக்கான விருதை' வென்று கொடுத்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட அணிகளின் பயிற்சியாளர்கள் மற்றும் அணித்தலைவர்களிடத்தே நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஹாகாவிற்கு முதலிடம் கிடைத்ததைத் தொடர்ந்து அவருக்கு மேற்படி விருது நேற்றுமுன்தினம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வாக்கெடுப்பில் ஹாகாவிற்கு 1,047 வாக்குகள் கிடைத்தன. இரண்டாம் இடத்தைப் பிடித்த பிரேசிலின் மெஸி 504 வாக்குகளையும், மூன்றாம் இடத்தைக் கைப்பற்றிய றொனால்டோ 426 வாக்குகளையும் பெற்றனர்.

கிறிஸ்தவரான ஹாகா, விளையாட்டுத் துறையில் தான் இப்படியானதொரு உச்ச நிலையை அடைவார் என ஒருபோதும் நினைத்ததில்லை என்று கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''உண்மையாகவே எனக்கு இதுவொரு சிறப்பான தருணமாகும். எனக்கு இது கனவும் கூட. நீங்கள் கேட்பதைவிட கடவுள் கூடுதலாகத் தருகின்றார் என்று எங்களுடைய பைபிள் சொல்கின்றது. அதுவே என்னுடைய வாழ்க்



கையில் நடந்திருக்கின்றது. அணியின் வெற்றிக்கான எனது ஒத்துழைப்புத் தொடரும்'' - என்று கூறினார்.


25 வயதான ஹாகா, இந்த ஆண்டிற்கான சிறந்த ஐரோப்பிய வீரர் என்ற விருதைக் கடந்த மாதம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிபாவின் சிறந்த வீரருக்கான விருதை கடந்த ஆண்டு இத்தாலியின் பாபியோ கனவாரோவும் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் பிரேசிலின் றொனால்டினோவும் வென்றெடுத்தனர்.

இதேவேளை, இந்த ஆண்டிற்கான பிபாவின் சிறந்த வீராங்கனையான விருதை பிரேஸிலின் மாற்ரா தொடர்ச்சியா இரண்டாவது தடவையாக வென்றெடுத்தார்.

## சப்பல் - ஹாட்லி கிண்ணத் தொடர்

# நாளைய போட்டியில் கில்கிறிஸ்ட் இல்லை



சிட்னி, டிச.19

நாளை நடைபெறவுள்ள நியூஸிலாந்துக்கு எதிரானசப்பல்-ஹாட்லி கிண்ணத் தொடரின் மூன்றாவது கடைசி ஒருநாள் போட்டியிலிருந்து கில்கிறிஸ்ட்டுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலிய அணி தற்போது 1-0 என முன்னிலையில் உள்ளது. 2ஆவது போட்டி மழையால் ரத்தானது. மூன்றாவது போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி (நாளை) நடக்கிறது. இந்தப் போட்டியிலிருந்து அதிரடி விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட்டுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

கில்கிறிஸ்ட்டுக்குப் பதிலாக பிரட் ஹடின்




சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஆஸியை நினைத்துப் பயப்படவில்லை

## ஹர்பஜன் பேட்டி

சிட்னி, டிச.19

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியுடன் மோத எந்தவித பயமும் இல்லை என்று சொற்போரைத் தொடக்கியுள்ளார் ஹர்பஜன்.

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி மெல்போண் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்காக கும்ளே தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றுள்ளது.

இந்நிலையில் சிட்னியிலிருந்து வெளியாகும் 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' பத்திரிகைக்கு ஹர்பஜன் நேற்று அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

''நாங்கள் (இந்திய அணி) சகல திறனும் உடையவர்கள். நாங்கள் சேர்ந்து செயற்பட்டால் ஆஸ்திரேலியாவுக்கு நல்ல போட்டியாளர்கள் என்பதைக் காட்ட முடியும். ஆஸ்திரேலிய அணியையும் அவர்களின் சிறந்த ஆட்டத்தையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், பயப்படவில்லை. ஆஸ்திரேலிய அணியில் ஷேன் வோர்ன், மக்கீல் போன்றோருக்குப் பின்னர்தரமான சுழல் பந்துவீச்சாளர்கள் இல்லை. ஒருநாள் போட்டிகளில் சோபித்துள்ள பிரட் ஹொக் அணியில் இடம்பெறுவதை எதிர்பார்க்கிறேன்.

''உலகில் சுழல் பந்துவீச்சை சாமர்த்தியமாக எதிர்கொள்ளக்கூடிய சிறந்த ஆட்டக்காரர்களுக்கு எதிராக பிரட் ஹொக் எவ்வாறு செயற்படுவார் என்பதைக் காண ஆவலாக உள்ளது. ஹொக் தேர்வு செய்யப்படும் பட்சத்தில் அவருக்கு என் வாழ்த்துக்கள்.'' - இவ்வாறு ஹர்பஜன் பேட்டியில் கூறியுள்ளார்.

இத்தொடர் குறித்து சச்சின் கூறுகையில், ''போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவிப்பது அவசியம். இது பந்துவீச்சாளர்களுக்கு பக்கபலமாக இருக்கும். இத்தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். போட்டிகள் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. அடிக்கடி 90 ஓட்டங்களில் ஆட்டமிழப்பது பற்றி [illegible] விளையாட்டில் [illegible] களிலிருந்து தற்போது ஓய்வு பெறும் எண்ணம் எதுவும் இல்லை.'' - என்றார் சச்சின்.

## இந்தியாவுடனான முதல் டெஸ்ட்

# ஆஸி. அணியில் ஹொக், ரெய்ற்

சிட்னி, டிச.19

இந்தியாவுடனான முதல் டெஸ்ட்டில் விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 12 வீரர்களை உள்ளடக்கியுள்ள இந்த அணியில் சுழற்பந்துவீச்சாளராக பிரட் ஹொக் இடம்பிடித்துள்ளார். அத்துடன் நான்காவது வேகப் பந்துவீச்சாளராக ஷோன் ரெய்ற் அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலில் பங்கேற்கின்றது. தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி மெல்போணில் ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிக்கான ஆஸி. அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆஸி. அணியில் தற்போது முன்னணி சுழற்பந்து வீச்சாளராகத் திகழும் ஸ்ருவேட் மக்கீல் காயம் காரணமாக சத்திரசிகிச்சை செய்து கொண்டுள்ளார் என்பதால் போட்டிகளில் பங்கேற்கமுடியாத நிலையில் உள்ளார். இதன் காரணமாக அவரது இடத்தை - அணியில் சுழற்பந்துவீச்சுத் துறையைக் கைப்பற்றியிருக்கின்றார் பிரட் ஹொக்.

வேகப்பந்துவீச்சில் இந்திய அணியை [illegible], ஸ்ருவேட் கிளார்க், மிற்செல் ஜோன்ஸன் ஆகியோருடன் ஷோன் ரெய்றும் 12 பேர் கொண்ட அணியில் இணைக்கப்பட்டுள்ளார். 4 வேகங்களும் அணியில் இடம்பெறும் பட்சத்தில் பிரட் ஹொக்கிற்கு வாய்ப்புக் கிடைப்பது அரிதானதே. அதுபோலவே ஹொக் கடைசி பதினொருவர் அணியில் இடம்பெறும் பட்சத்தில் ஷோன் ரெய்ற் பெவிலியனில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்.

பிரட் ஹொக்கை சேர்ப்பதா அல்லது 4 வேகப்பந்து வீச்சாளர்களை சேர்ப்பதா எனும் குழப்பம் ஆஸ்திரேலிய அணியில் கடைசி வரைக்கும் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. பிராட் ஹொக் ஒருநாள் போட்டிகளில் முக்கிய வீரராக இடம்பெற்று வந்திருந்தாலும் அவர் வெறும் 4 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்கு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அறிவிக்கப்பட்டுள்ள அணியில் வழமையான துடுப்பாட்ட வீரர்களே இடம்பிடித்துள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:-

ரிக்கி பொண்டிங் (அணித் தலைவர்), மத்தியூ ஹைடன், பில் ஜக்கிஸ், மைக்கல் ஹசே, மைக்கல் கிளார்க், அன்ட்ரூ சைமண்ஸ், அடம் கில்கிறிஸ்ற், பிரட் ஹொக், பிரட் லீ, ஸ்ருவேட் கிளார்க், மிற்செல் ஜோன்ஸன், ஷோன்ரெய்ற்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியில் நீடிக்கப் போவதில்லை இளைஞர்களுக்கு வழிவிடுவேன்

## பிடல் காஸ்ரோ தெரிவிப்பு


ஹவானா, டிச.19

கியூபாவின் இளைய தலைமுறையினரின் வளர்ச்சிக்குத் தடையாகப் பதவியில் தொடர்ந்து நீடிக்கப் போவதில்லையென அந்த நாட்டின் ஜனாதிபதி பிடல்காஸ்ரோ தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் கியூப அரச தொலைக் காட்சியில் வாசிக்கப்பட்ட கடிதமொன்றிலேயே காஸ்ரோவின் இந்தச் செய்தி இடம்பெற்றுள்ளது.

அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருப்பது தனது பணியல்ல எனவும் மாறாக தான் வாழ்ந்த மிக விசேடமான யுகத்தின் மூலம் கிடைத்த அனுபவங்களையும், எண்ணங்களையும் புதிய தலைமுறைக்கு கையளிப்பதே தனக்குரிய கடமை என்றும் காஸ்ரோ குறிப்பிட்டுள்ளார்.

கியூபாவின் தலைமைத்துவத்தை காஸ்ரோ வேறொருவரிடம் கையளிக்கலாம் என்பதற்கான முதலாவது அறிகுறி இந்தக் கடிதமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிடல்காஸ்ரோதனது அதிகாரத்தைக் கடந்த வருடம் தற்காலிகமாக சகோதரர் ரவூல் காஸ்ரோவிடம் கையளித்திருந்தமை தெரிந்ததே. அதன் பின்னர் பொதுமக்கள் முன்னிலையில் பிடல் தோன்றவில்லை. எனினும், அரசு அவரது படங்களை வெளியிட்டு வருகின்றது.

உலக அரங்கில்

காஸ்ரோ 1959ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின்னர் கியூபாவின் தலைமைத்துவத்தை வகித்து வருகின்றார். 2006ஆம் ஆண்டு ஜூலையில் வயிற்றில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பை தற்காலிகமாக சகோதரரிடம் கையளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் ஷெல் தாக்குதலில் சோமாலியாவில் 12 பேர் பலி!

மொகடிசு, டிச.19

சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொகடிசுவின் வட பகுதியில் 10 பேரும் நகரின் பகாரா சந்தைப் பகுதியில் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

தாய், குழந்தைகள் மூவர் உட்பட 10 பேரின் உடல்களைப் பார்த்தனர் என பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சோமாலியாவில் 1991இலிருந்து உறுதியான மத்திய அரசு காணப்படாத அதேவேளை, அந்த நாடு ஆபிரிக்காவின் மோசமான மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்வதாக ஐக்கிய நாடுகள் எச்சரித்துள்ளன.

சோமாலியாவில் கடந்த வருடம் பதவியிலிருந்து அகற்றப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளை மீண்டும் அதிகரித்திருப்பதாக எச்சரிக்கப்பட்டிருந்தது.

இவ்வருடம் மோட்டார் தாக்குதல்கள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் வீதி மோதல்களில் சிக்கி 6,000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று உள்ளூர் மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சோமாலியாவில் 1,800 உகண்டா சமாதானப் படையினர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சோமாலியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட புகைப்படச் செய்தியாளர் குவென் லெ கொயில் பாதுகாப்பாக உள்ளார் என்றும் அவரை விடுவிப்பதற்கு கடத்தல்காரர்கள் 70,000 அமெரிக்க டொலர்களைக் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமராகத் தயார் புடின் அறிவிப்பு

மொஸ்கோ, டிச.19

ரஷ்யாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தனது ஆதரவாளரான மிட்ரை மெட்வெடெவ் வெல்லும் பட்சத்தில் தான் பிரதமராக பணியாற்றுவதற்குத் தயார் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

மொஸ்கோவில் ஆளும் ஐக்கிய ரஷ்யக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அந்த மாநாட்டில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மெட்வெடெவ் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புடினிற்கான மக்களின் ஆதரவு காரணமாக மெட்வெடெவ் வெற்றி பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவின் அரசமைப்பின் படி புடின் மூன்றாவது தடவையாகத் தொடர்ந்து ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாதது. எனினும், 2012 இல் அவர் போட்டியிடலாம்.

ரஷ்ய மக்கள் மெட்வெட்வை நம்பி அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்தால், நான் அரசிற்குத் தலைமை தாங்கவும் தயார் என புடின் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் புடின் பதவியில் நீடிப்பதற்கு வேறு வழிகளை கையாள்வார் என்ற ஊகங்களுக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தலை விதியை மெட்வெட்வின் கரங்களில் ஒப்படைக்கத் தான் தயங்கவில்லையென புடின் தெரிவித்துள்ளார்.

# அனைத்துச் சமூகத்தினருக்கும் மலேஷியாவில் சம வாய்ப்பு!

## அந்நாட்டு பிரதமர் உறுதியளிப்பு

கோலாலம்பூர், டிச.19

மலேஷியாவில் வாழும் அனைத்துச் சமூகத்தினருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் என்று அந்நாட்டு பிரதமர் அப்துல்லா அகமது படாவி உறுதியளித்துள்ளார்.

முஸ்லிம்கள் அதிகம் வாழும் மலேஷியாவில் தங்களது உரிமைகள் மறுக்கப்படுதைக் கண்டித்து இந்தியர்கள், கடந்த மாதம் மாபெரும் பேரணி நடத்தினர். இது தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு பல நாடுகளும் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்நிலையில், பிரதமர் படாவி இத்தகைய கருத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

"எந்தத் துறையிலும், எந்தச் சமூகத்தினரும் புறக்கணிக்கப்பட மாட்டார்கள். அனைத்துத் துறைகளிலும் சமவாய்ப்பு அளிக்கப்படும். அதேசமயம், நாட்டில் சமூக நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதை மற்ற சமூகத்தினரும் புரிந்துகொள்ள வேண்டும்." - இவ்வாறு கூறினார் படாவி.

நேற்றுமுன்தினம் அவரது சொந்தத் தொகுதியான கெபாலா படாஸில், இந்தியர்களிடையே பேசும்போது அவர் இத் தகவலை வெளியிட்டார். அத்துடன், அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மலேஷியாவில் வாழும் அனைத்துச் சமூகத்தினரையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கின்றார் என்றும், இந்தியர்களை எதிரியாகப் பார்ப்பதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கல்வித்துறையில் அனைத்து சமூகத்தினருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதில் அனைத்துச் சமூகத்தினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். அனைவருக்குமே கூட்டுப் பொறுப்பு உண்டு. ஒருவரை ஒருவர் குற்றம் சொல்வதில் எந்தப் பிரயோசனமும் கிடையாது." - என்றும் படாவி கூறினார்.

மலேஷியாவில் வாழும் மக்கள் தொகை அடிப்படையில்தான் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. இங்கு மலாய் மக்கள் அதிகம். அடுத்தபடியாகச் சீனர்களும், மூன்றாவதாக இந்தியர்களும் வாழ்கின்றனர். இதற்கேற்பதான் அரசின் கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன.

இந்த நாடு அமைதியாகவும், பாதுகாப்பானதாகவும் திகழ அரச ரீதியில் எத்தகைய உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கின்றார் என்றும் மலேஷியப் பிரதமர் கூறினார். நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நினைவுபடுத்த அவர் தவறவில்லை.

# ஈராக்கிற்குள் நுழைந்தது துருக்கிப் படை

## குர்திஷ் போராளிகளைத் தேடி அழிக்க

இஸ்தான்புல், டிச.19

துருக்கியின் 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு எல்லைகளைக் கடந்து ஈராக்கிற்குள் நுழைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குர்திஷ் போராளிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக ஈராக்கிற்குள் முதற்தடவையாக துருக்கிப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலகுரக ஆயுதங்களைத் தாங்கிய துருக்கி இராணுவ வீரர்கள் மூன்று கிலோ மீற்றர் உள்ளே வந்துள்ளனர் என ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி நிர்வாகம் இது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

குர்திஷ் போராளிகளை தேடிக் கண்டுபிடிப்பதற்காக ஈராக்கிற்குள் முதற்தடவையாக துருக்கிப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர். துருக்கி நாடாளுமன்றம் இதற்கான அனுமதியை ஏற்கனவே வழங்கியிருந்தது.



ஈராக், ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளுக்கும் நடுவில் உள்ள சீடா ஹஸ் பகுதிக்குள்ளேயே துருக்கிப் படை ஊடுருவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மிகவும் கடினமான மலைப்பகுதியெனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பகுதியில் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், பெரிய அளவில் மோதல்கள் எதுவும் நேற்று மாலை வரை இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் துருக்கி விமானங்கள் ஈராக்கிலிலுள்ள குர்திஷ் நிலைகளைத் தாக்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் சீனா சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. 2006ஆம் ஆண்டில் 4.96 கோடி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு சென்றனர் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

குறிப்பாக, புத்த மதத்தினருக்கான 'நம்பர் 1' சுற்றுலாத் தளமாக தனது நாட்டை உருவாக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த வகையில், ஷான்டங் மாகாணத்தில் உள்ள இன்டாய் என்னுமிடத்தில் இந்த பிரம்மாண்டமான புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்டுள்ள இந்த சிலையைக் காண சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் படையெடுத்து வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் 2020 இல் பிரான்ஸை பின்னுக்குத் தள்ளி, உலகின் 'நம்பர் 1' சுற்றுலாத் தளம் என்ற பெருமையைப் பெறவும் வாய்ப்பிருக்கிறது.

# முஷாரப் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவர பெனாஸிர் திட்டம்

## அமையப் போகும் புதிய நாடாளுமன்றில் அரங்கேறுமாம்

இஸ்லாமாபாத், டிச.19

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் முடிந்து புதிய நாடாளுமன்றம் செயற்படத் தொடங்கியதும் அந்நாட்டு ஜனாதிபதி முஷாரப் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவரமுடிவு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அந்நாட்டு தேர்தல் [illegible] இத் தேர்தலில் [illegible] பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(கியூ), நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்), பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகிய பிரதானக் கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகள் போட்டியில் உள்ளன.

இத் தேர்தலில் முஷாரப்புக்கு பெரும் சரிவு இருக்குமென கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் பெனாஸிர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் தேர்தல் கண்காணிப்புப் பிரிவின் தலை[illegible]ஷா கூறியவை வருமாறு:-

[illegible] முஷாரப் கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு சட்ட மீறல்களை செய்துள்ளார். அரசியல் அமைப்புச் சட்டப்படி அவர் நடக்கவில்லை. பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சிகள் அதிகளவில் வெற்றிபெற வாய்ப்புள்ளது. அவ்வாறு வரும் போது புதிய நாடாளுமன்றத்தில் முஷாரப் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து 3 இல் 2 பங்கு ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதேபோல் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பெற்றால் ஜனநாயகத்துக்கு எதிரான அனைத்து சட்டத் திருத்தங்களும் நீக்கப்படும். முஷாரப்பின் இராணுவச் சட்டங்களை பாகிஸ்தான் மக்கள் கட்சி எப்போதும் எதிர்க்கும்." - என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## இனிப் போர்தான் என்பது 'எப்பவோ முடிந்த காரியம்'

மீண்டும் முழு அளவிலான இராணுவப் போர் வெறிப் பொறிக்குள் இலங்கைத் தீவு சிக்கப் போகின்றது. சமாதானத்திற்கான - அமைதிப் பேச்சுகளுக்கான - கதவுகள் இறுக இழுத்து மூடப்படப் போகின்றன. அதற்கான கட்டியத்தை - முன்னறிவித்தலை - இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூசகமாக வெளியிட்டிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது உத்தியோகபூர்வ தடை விதிக்கும் உத்தேசம் அரசுக்கு இருப்பது பற்றிய தகவலை அவரே தமது கருத்து நிலைப்பாடாக வெளியிட்டிருக்கின்றார்.

சமாதானத்தையும் அமைதியையும் பரப்புவதையே தமது உலக வருகையின் இலக்காகக் கொண்ட சமாதானப் பிரபு இயேசுவின், அவனி வருகையை ஒட்டித் தாம் தமது அலரி மாளிகையில் நடத்திய கிறிஸ்மஸ் நிகழ்விலேயே முழு யுத்த வருகை பற்றிய தகவலையும் அவர் கோடி காட்டியிருக்கின்றார்.

தேசிய சமாதானப் பேரவையின் பிரதிநிதி ஜெஹான் பெரேரா சுட்டிக்காட்டியமை போன்று, புலிகள் மீது அரசு தடை விதிப்பது என்பது, இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வே தனது உறுதியான நோக்கம் என்ற அரசின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்துகின்றது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இத்தகைய இராணுவ வெறித்தன நிலைப்பாட்டுப் போக்கு புதிய விடயம் ஒன்றல்ல. இலங்கையில் ஆட்சிக்கு வந்த அண்மைக்கால அரசுகள் எல்லாமே, ஆட்சிக்கு வந்த புதிதில் - இராணுவ சமவலு நிலையில் தாங்கள் மேலாண்மை பெற்றிருக்கின்றன எனக் கருதும் சூழ்நிலைகளில் - இப்படித்தான் போர் வெறிச் சூளுரைகளையும் இராணுவத் திமிர்த்தனப் பேச்சுக்களையும் பிரகடனப்படுத்தி நின்றன என்பது எமது பட்டறிவு.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் அவரது அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் -

ஜனாதிபதி பிரேமதாஸவும் அவரது அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது மாமனாரான அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் -

உரைத்த சூளுரைகளையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவும் இப்போது உரைக்கின்றனர் என்பதும் வெளிப்படை.

இப்படிப் போர் வெறித்திட்டத்தைக் கட்டவிழ்த்து விட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு, யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி, வன்னிப் பெரு நிலப்பரப்பை 'ஜெயசிகுறு' நடவடிக்கை மூலம் பெரும்பாலும் கிழக்கு மேற்காக இரண்டாகப் பிளந்து விட்டதாக மார்தட்டி, 'புலிகளில் 96 வீதத்தை அழித்து விட்டோம்; இனி எஞ்சியிருக்கும் நான்கு வீதப் புலிகளையும் விரைவில் அழித்தொழித்து விடுவோம்' - என்று பிரகடனப்படுத்தியபோதுதான், விஸ்வரூபம் எடுத்து வெளிப்பட்டது புலிகள் அமைப்பு. விடயங்கள் தலைகீழாகின.

நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச்சுவராக்கி, பே(ா)ராயுதங்களை வாங்கிக் குவித்து, தன்னுடைய இராணுவக் கட்டமைப்பைப் பேரரக்க - இராட்சத - வடிவத்துக்கு உருவேற்றி, உசுப்பேற்றி வைத்திருக்கும் கொழும்பு அரசின் உள்நோக்கம், தமிழர் தேசியத் தாயகம் மீது கொடூரப் போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விடுவதே என்பதில் சந்தேகம் இல்லை.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தார்மீக நியாயத்துக்கு மேலதிகமாகத் தமிழர் தாயகத்திடம் இருக்கும் ஒரே பலம் - வலிமை - புலிகளின் போரியல் சக்திதான். அதை அழித்து, ஒழித்து, நிர்மூலமாக்கிய பின், தமிழர்களைத் தனது காலில் மண்டியிடச் செய்ய வைத்து, தான் விரும்பும் உருப்படியற்ற ஒரு பிச்சைத் திட்டத்தை, இனப்பிரச்சினைக்கான தீர்வு வடிவமாகத் தமிழர் தலைமீது திணித்து, தமிழர்களை அடக்கி, ஒடுக்கும் இலக்கையே சிங்கள தேசம் தனது உள்நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது என்பதும் திண்ணம்.

''புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் ஒடுக்கினால் மட்டுமே சமாதானம் சாத்தியமாகும் என்று நாம் நம்புகிறோம்.'' - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடும் கூற்றினுள் புதைந்து கிடக்கும் உட்கருத்து இதுதான்.

நாடாளுமன்றில் போதிய பலமின்றி, வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அல்லாடிய மஹிந்தரின் அரசு, கடைசி நேரத்தில் - இறுதிக் கட்டத்தில் - பௌத்த, சிங்களப் பேரினவாத, மேலாதிக்கச் சிந்தனை கொண்ட ஜே.வி.பியின் காலில் சரணடைந்த போதே அதன் பெறுபேறு இப்படித்தான் நடக்கும் என இப்பத்தியில் கோடி காட்டியிருந்தோம். ஜே.வி.பியினரின் தயவில் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் அரசு, ஜே.வி.பி போடும் தாளத்திற்கு ஏற்ப ஆடாமல் வேறு எப்படித்தான் செயற்படும்?

புலிகள் இயக்கத்தைத் தடை செய்தல், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கிழித்தெறிதல் போன்ற இன்னோரன்ன வாக்குறுதிகளை வழங்கி, புது வருடத்தில் அவற்றைச் செயற்படுத்த இணங்கியதன் மூலமே ஜே.வி.பியை நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கடைசி நேரத்தில் தனக்கு இசைவாக அரசுத் தரப்பு வளைத்துப் போட்டது என்பதும் ஏற்கனவே கசிந்த செய்திதான்.

அந்த வாக்குறுதிகளைத் தமது அரசு தப்பாமல் செயற்படுத்தப் போகின்றது என்பதை தமது அரசுடன் உடன்பாடு கண்ட ஜே.வி.பி. தலைமைக்கு சூசகமாகவும், அதுபற்றிய முன் தகவலை சர்வதேசம் உட்பட ஏனைய தரப்புகளுக்கு கட்டியமாகவும் இப்படி நத்தார் விழாச் சந்திப்பின்போது கசிய விட்டிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்தர். அவ்வளவே.

புலிகள் மீது தடை விதிக்கப்படுமானால், புலிகளுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு போன்றவை தொடர்பாடல் நடத்த முடியாமல் போகும். அதனால் இப்போது செத்துச் செயலிழந்து, உருக்குலைந்து, சருகாகி, செல்லாக் காகிதமாகக் கிடக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் தன்பாட்டிலேயே-உத்தியோகபூர்வமாகவே-கைவிடப் பட்டதாகிவிடும். பிறகென்ன? முழு அளவிலான யுத்தம்தான்.

மஹிந்த அரசின் உள்நோக்கமும், திட்டமும், விருப்பமும், இலக்கும், தந்திரோபாயமும் எல்லாம் ஒன்றுதான். அது - தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தம் ஒன்றைத் தொடுப்பதே. ஆகவே, இந்நிலையை யாழ்ப்பாணம் யோகர் சுவாமியின் மகா வாக்கியத்தில் கூறுவதானால் இங்கு போர் என்பது 'எப்பவோ முடிந்த காரியம்.' அதுவே நிலைமை. அதை எதிர்கொள்வதைத் தவிர மக்களுக்கு வேறு வழியே இல்லை என்றாகிவிட்டது.

### அரச அரசியல் தலையீடு, சுயாதீனமின்மை ஆகியன காரணமாக

# இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச தரநிலை அந்தஸ்தைப் பறிகொடுத்தது!

கொழும்பு, டிச.19

இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேசரீதியாகத் தரமிறக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச ஒருங்கிணைப்புக் குழு இதனை அறிவித்துள்ளது.

தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாட்டில் அரச - அரசியல் தலையீடுகள், சுயாதீன நடுநிலைப்போக்கின்மை ஆகியவையே அது சர்வதேச தரத்தில் கீழிறக்கப்பட்டமைக்குக் காரணமாகும்.

இத்தகைய தரமிறக்கும் நடவடிக்கை இலங்கையில் சுயாதீன சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பதற்கான தேசிய நிறுவனங்களுக்கான சர்வதேச ஒருங்கிணைப்புக் குழு, சமீபத்தில் இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவை வெறுமனே பார்வையாளர் என்ற நிலைக்குத் தரமிறக்கியது.

இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் - சுதந்திரத்தில் - அரசு தலையிட்டமையே இதற்குக் காரணம்.

சர்வதேச ஒருங்கிணைப்புக் குழு, தேசிய மனித உரிமை ஸ்தாபனங்களை உலகளாவிய ரீதியில் ஒழுங்குபடுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வாறு பார்வையாளர் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையால், இனிமேல் அதனால் சர்வதேச கூட்டத் தொடர்களில் வாக்களிக்க முடியாது. மேலும் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்கான தேர்தலில் போட்டியிடும் தகுதியையும் அது இழந்துள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிற்கான ஆணையாளர்கள் இலங்கையின் சட்டங்களுக்கமைய நியமிக்கப்படாதமை, ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சமநிலை - அரசியல் கலப்பின்மை போன்றவை காணப்படாதமை ஆகிய இரு காரணங்களினாலேயே அது பார்வையாளர் நிலைக்குக் கீழிறக்கப்பட வேண்டுமென சர்வதேச ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்தது.

**அரசு கூறுவது உண்மைக்குப் புறம்போனது**

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக் குழு காணாமல்போன 2,000 பேர் குறித்த விசாரணைகளை இடைநிறுத்தியிருந்தமையும் இதற்கான காரணமாகும்.

மனித உரிமை ஆணைக்குழு சுயாதீனமான-உறுதியான-அமைப்பு என இலங்கை அரசு தெரிவிப்பது உண்மைக்கு மாறானது. துரதிஷ்டவசமாக மனித உரிமை மீறல்களுக் குத் தீர்வு காண்பதற்கு இலங்கையில் நம்பகத்தன்மை வாய்ந்த உள்ளூர் கட்டமைப்புகள் காணப்படவில்லை.

2006 நடுப் பகுதியிலிருந்து இலங்கையில் பொதுமக்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. எனினும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இது விடயத்தில் செயற்றிறன் அற்றுக் காணப்படுகின்றது.

மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காண்பதற்கு உள்ளூர் நிறுவகங்கள் தவறியுள்ளமையால் வலுவான கண்காணிப்பு ஆணையுடன் கூடிய ஐக்கிய நாடுகள் கண்காணிப்புக் குழுவை இலங்கை அரசு ஏற்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## செஞ்சிலுவை கிளைத் தலைவர் படுகொலை; தகவல் தரக் கோருகின்றது படைத்தரப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைத் தலைவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பாதுகாப்பு படைகளின் பலாலித் தலைமையகம் கேட்டுள்ளது.

இது தொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

செஞ்சிலுவைச் சங்கத்தின் உறுப்பினர் ஒருவரான சூரியகாந்தி தவராசா கடந்த 16ஆம் திகதி கொல்லப்பட்டு அவரின் சடலம் கைதடிப் பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளது. குடும்பத் தாருடன் தனது வீட்டில் இருந்தவேளை அங்கு வந்த புலிகள் இயக்க உறுப்பினர்களால் அவர் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார் எனத் தெரிய வருகிறது. அத்துடன் பயங்கரவாதிகளால் சுப்பிரமணியம் கௌசிகன் என்ற இளைஞரும் கொல்லப்பட்டு அவரின் சடலமும் கைதடிப் பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பாடுபட்ட இவரைப் படு கொலை செய்ததன் மூலம் தாம் சமா தானத்தை விரும்பவில்லை என்பதைப் புலிகள் உணர்த்தி உள்ளனர். இன்று இவ் வாறானவர்களை படுகொலை செய்வதன் மூலமும் நாளை அப்பாவித்தமிழ் மக்களைப்படுகொலை செய்தேனும் தமது குறுகிய நோக்கத்தை அடைய புலிகள் முயற்சிக்கின்றனர் என்பது தெளிவு.

இவ் வாறு சமாதானத்துக்காக பாடுபடும் புத்தி ஜீவிகளைப் படுகொலை செய்வதை பாது காப்பு படையினரான நாம் கண்டிப்பதுடன் படுகொலை புரிவோர் பற்றிய விசாரணை களையும் ஆரம்பித்துள்ளோம். இந்தப் படு கொலை சம்பந்தமாக மேலதிக தகவல்கள் தெரிந்திருப்பின் 021 222 3026, 077 314 8399 ஆகிய தொலைபேசி இலக் கங்களுக்கு அறிவிக்கவும்

தகவல் வழங்குவோர் பற்றிய விவரங் கள் பாதுகாக்கப்படும் என்பதையும் உறு திப்படுத்துகின்றோம் என்று- அதில் உள் ளது.

(அ-202)

## எல்லாக் குட்டுகளையும் கருணா கக்கிவிட்டாராம்!

கொழும்பு, டிச. 19

சட்டவிரோதமாக-போலி பாஸ்போட்டுடன் - பிரித்தானியாவில் கைது செய்யப்பட்டுள்ள கருணா எல்லா விடயங்களையும் கக்கிவிட்டார். இதனால் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் உட்படப் பலரின் குட்டுகள் அம்பலமாகிவிட்டன.

இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கை, கௌரவம் என்பன சர்வதேச அரங்கில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன என ஐ.தே.க. உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின்படியே வெளிவிவகார அமைச்சு கருணாவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுத்தது.

கோகில குணவர்தன என்ற பெயரிலான இராஜதந்திரக் கடவுச்சீட்டு வெளிவிவகார அமைச்சின் மூலமே பெற்றுக் கொடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்த நாள்முதல் பிரித்தானியாவில் மாட்டிக் கொண்டமைவரை சகல விடயங்களையும் கருணா, பிரித்தானியப் பொலிஸாருக்கு வாக்குமூலமாக அளித்துள்ளார். இதனால் பலரின் முகமூடிகள் கிழியப் போகின்றன. இது நமது நாட்டின் இறைமைக்கு ஏற்படுத்தப்பட்ட பெரிய அவமானம் - என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் கூறினார்.

(சி)

## குடாநாட்டில் மழை தொடர்கிறது; இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்குடாநாட்டில்சிலகடந்தமூன்று தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் காற்றுடன் கூடிய மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை ஓரளவு பாதிப்படைந்து உள்ளது.தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் தேங்கிஉள்ளது, ஆங்கங்கே வீதிகளிலும் மற்றும் தோட்டப்புறங்களிலும் பயன்தரும் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

தொடர்ந்து மழைபெய்துகொண்டிருப்பதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்படுகிறது. அரச அலுவலகங்களில் ஊழியர்களின் வருகை கூட குறைவாகவே இருந்தது. யாழ்.ஆஸ்பத்திரியிலும் நோயாளர்களின் வரவு ஒப்பீட்டளவில் குறைந்திருந்தது.

நேற்று முன்தினம் இரவு பெய்த காற்றுடன் கூடிய மழையால் பல இடங்களிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்தன. ஏராளமான வாழைகள் குலைகளுடன் பப்பாசி மரங்கள் காய்களுடனும் வீழ்ந்துள்ளமையால் பழச்செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

சந்தைகளில் மரக்கறிகளின் விலையும் அதிகரித்தன. கடந்தவாரம் வீழ்ச்சியடைந்திருந்த மீனின் விலையும் மீண்டும் உயர்ந்தது. (அ-2-202-86)

### நாளை

| | |
|---|---|
| மார்கழி - 04 | வியாழக்கிழமை 20.12.2007 |
| திதி : ஏகாதசி | பி.ப 04.42 |
| நட்சத்திரம் : | அச்சிவினி பி.ப 12.13 |
| சுபநேரம் | : 07.54 - 09.24 |
| ராகுகாலம் | : 01.54 - 03.24 |

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,டிசெ.19

உழவர் திருநாளையொட்டி அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் வலிகாமம்,யாழ்ப்பாண உதைப் பந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்திவரும் 11பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* அராலி ஐக்கிய வி.க. எதிர் ஆனைக்கோட்டை கலை ஒளி வி.க.
* இளவாலை யங்கென்றீஸியன் வி.க எதிர் திருமகள் வி.க.
* அராலி பாரதி வி.க. எதிர் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் வி.க.

(50-86)

## மொறட்டுவையில் பல்கலை. மாணவர் குழு மோதல்

கொழும்பு,டிச.19

கொழும்பு - மொறட்டுவை பல்கலைக்கழகப் பொறியியல் பீட சிங்கள மாணவர்களுக்கிடையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற குழு மோதல் ஒன்றில் 4 மாணவர்கள் காயமடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மோதல் இடம்பெற்றதையடுத்து பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர். நாளை ஆரம்பமாகவிருந்த பல்கலைக்கழக விடுமுறை, நேற்று உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டணி எம்.பிகள் கனடாவுக்குச் செல்வதற்குத் தடை!

கொழும்பு, டிசெ. 19

தமிழ்த் தேசிய கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனடாவுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ, அல்லது புலிகளுக்கு ஆதரவளிக்கும் எந்தத் தனிநபருக்கோ கனடாவுக்குள் நுழைய விஸா வழங்கக் கூடாதென இலங்கையில் உள்ள கனேடியத் தூதரகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தூதரகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்காமல் வேறு வழியில் தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனடாவுக்குள் நுழைகின்றனர் என அவர்களுக்குத் எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று தெற்காசிய ஊடக வலையமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளை அடுத்தே அவர்கள் மீது இத்தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் கனேடிய இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார். (சி)

# மனோகணேசனுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நேற்று திடீர் வாபஸ்

கொழும்பு, டிசெ. 19

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நேற்று வாபஸ் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது பாதுகாப்பிற்கென நேற்றுவரை 10 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தற்போது இரண்டு பொலிஸார் மட்டுமே சேவையில் உள்ளனர்.

வரவு - செலவுத்திட்டத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தரப்பினருக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்புகள் மெல்ல மெல்ல வாபஸ் பெறப்படும் தொடரில் இவரது பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது என கருத வேண்டியுள்ளது என்று அவருக்கு நெருங் கிய வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன. (சி)

# பதுளை மண்சரிவு

பதுளை, டிசெ.19

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் அடை மழை காரணமாகப் பதுளை மற்றும் அப்புத்தளை பகுதிகளிலுள்ள உடவேரிய, ஒய்யா தோட்டங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பல குடியிருப்புகள் சேதமாகியுள்ளதுடன் சுமார் 105 பேர் அநாதரவாகியுள்ளனர். (சி)

# நெடுந்தீவில் கரையொதுங்கிய மனித முண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.19

நெடுந்தீவு கடற்கரையில் நேற்றுக் காலை மனித முண்டமொன்று கரையொதுங்கியிருப்பதாக ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து முண்டத்தை மீட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு ஊர்காவற்றுறைப் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

முண்டத்தை மீட்ட பொலிஸார் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். முண்டம் இனங்காணும் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-1)

# வீட்டில் பணிபுரிந்த தமிழ்ப் பெண்ணை பொலிஸில் ஒப்படைத்தார் அமைச்சர்

கொழும்பு, டிச. 19

தமது வீட்டில் பணிபுரிந்த தமிழ்ப் பெண்ணை அவரிடம் அடையாள அட்டை இல்லை எனத் தெரிவித்து கறுவாக்காட்டுப் பொலிஸில் ஒப்படைத்துள்ளார் அமைச்சர் மஹிந்த விஜயசேகர.

இந்தப் பெண் சில காலமாக இவரது வீட்டில் பணிபுரிந்து வந்தபோதும் அவரிடம் அடையாள அட்டை இல்லை என்ற அமைச்சரின் முறைப்பாட்டை அடுத்து அவரை தீவிர விசாரணைக்கு உட்படுத்தும் நோக்கில் பொலிஸார் நேற்றுக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அவரை விசாரணை செய்த நீதிவான் அஜித் அனவரத்தன இவரை விளக்கமறியலில் வைத்து மேலதிக விசாரணைகளை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (சி)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டது.

எனினும், பயணிகள் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை என்று முன்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. புதிய எஞ்ஜின் ஒன்றின் உதவியுடன் அந்த ரயில் மீண்டும் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் நேற்றிரவு நடைபெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

## தமிழ் மாவட்டங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகபடுவான் குளம் 3 அடி 4 அங்குலமும், புதுமுறிப்புக் குளம் 7 அடி ஒரு அங்குலமும், பிரமந்தனாறுக் குளம் 5 அடி 6 அங்குலமும், வன்னேரிக்குளம் 3 அடி 3 அங்குலமும், அக்கராயன்குளம் 12 அடி 6 அங்குலமுமாக நீர்மட்டம் பதிவாகியுள்ளது.

பல இடங்களிலும் கால்வாய்கள் நிரம்பி வழிந்தோடுவதாகவும் பனங்கண்டி போன்ற தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### திருமலையில்

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் பெருமழையால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பத்தாம் பகுதி, திருக்கடலூர், வீரநகர், சல்லி ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அந்தப் பகுதிகளில் தங்கியிருந்த 200 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

அதேவேளை, மூதூர், கிளிவெட்டிப் பகுதிகளிலிருந்து சுமார் 400 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்றும் உலகதரிசனம் சி.டி.எப். ஆகிய அமைப்புக்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. மண்முனை முருகன் ஆலயம், கம்பனிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் வெள்ளம் புகுந்ததால் பூசைகள் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், சுமார் 7 ஆயிரத்து 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்புப் பிரதேச செயலகப் பிரதேசத்தில் 5 ஆயிரத்து 825 குடும்பங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று, மாவடிவேம்பு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் 1421 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 260 பேரும் பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுர பிரதேச செயலாளர் பிரிவில் 59 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரணசேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். (அ-2-151)

## மனிதப் பேரழிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சமீபத்தில் கொல்லப்பட்ட மதகுரு வண. பாக்கியரஞ்சித்தின் நினைவு நிகழ்ச்சியிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சமூகம் மற்றும் மதத்திற்கான நிலையத்தின் இயக்குநரான அருட்தந்தை ரொஷான் பி.சில்வா யாழ்.குடாநாடு பற்றிய தனது அனுபவங்களை விவரித்தார்.

யாழ்ப்பாணத்தில் வீதியைக் கடக்க மூன்று மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. வீதித் தடைகளில் பெருமளவு நேரம் வீணடிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மக்களின் துயரங்களை நேரில் கண்டேன். 'ஒரு வருடமாக இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படுகின்றது. ஆட்கடத்தலும் கொலைகளும் நாளாந்த நிகழ்வுகள் - என்றார்.

இருபத்தைந்து வருடங்கள் போதும், போதும். யுத்தத்தைத் தயவுசெய்து நிறுத்துங்கள். நாங்கள் உரிமைகள் எதனையும் கேட்கவில்லை. எங்களை நிம்மதியாக இருக்க விடுங்கள் - என அங்கு மன்றாடினார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றுமொரு மதகுரு. (சி)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை, தற்போது குறைவடைந்து வருகின்றது. இதனால், இன்று புதன்கிழமை மழை வீழ்ச்சி குறைவடையும் நிலை தோன்றியிருப்பதாக வழிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி நந்தலால் பீரிஸ் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்களிலும் மத்திய மாகாணத்தில் சில பகுதிகளிலும் மழை தொடர்ந்து பெய்யும் சாத்தியம் இருப்பதாக அவர் கூறினார். (அ)

## இலங்கைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக இருவரும் நேற்று புதுடில்லி புறப்பட்டுச் சென்றனர்.

இந்நிலையில் தான் 'தினமணி' -

பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ள விடயங்கள் குறித்தே தமிழக முதல்வருடன் எம்.கே. நாராயணன் கலந்துரையாடினார். இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரில் அந்நாட்டு இராணுவத்துக்கு ஆதரவாக இந்தியப் படைகளை அனுப்புதல், சில தினங்களுக்கு முன் நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காயமடைந்தமை ஆகியவை குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினர்.

உள்நாட்டுப் போர் காரணமாகத் தமிழகத்துக்குள் ஊடுருவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் இருவரும் விவாதித்தனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை நீடிப்பது பற்றிய மத்திய அரசின் முடிவு குறித்தும், அது தொடர்பாக அண்மையில் தமிழக டி.ஜி.பி. பிறப்பித்துள்ள 'நோட்டீஸ்' குறித்தும் இந்தச் சந்திப்பின்போதுவிவாதிக்கப்பட்டன எனத் தெரிகிறது.-எனத் தனது செய்தியில் 'தினமணி' குறிப்பிட்டுள்ளது.

## இலங்கைக்கு இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமஷ்டி அரசின் 2008 வரவு - செலவுத் திட்டத்திற்கான ஐம்பதாயிரம் கோடி டொலர் நிதி ஒதுக்கீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ள அமெரிக்க செனட் மற்றும் சனப் பிரதிநிதிகள் சபை அதன் ஒரு பகுதியாக இந்த நிபந்தனை விடயங்கள் குறித்தும் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டிற்குள்ளேயே அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் வெளிநாடுகளுக்கான உதவித்திட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

### நிபந்தனைகள் மூன்று

இலங்கை நிலைவரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவே அமெரிக்க காங்கிரஸ் இராணுவ உதவியை மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் காண்பதுடன் தொடர்புபடுத்தியுள்ளது.

* சட்டவிரோதப் படுகொலைகளில் ஈடுபட்ட- சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்த - இராணுவ அதிகாரிகளை விசாரணை செய்யவேண்டும்.
* மனித நேயப் பணியாளர்களும், செய்தியாளர்களும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
* இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபை தனது மனித உரிமை அலுவலகத்தை அமைப்பதற்கு அரசு அனுமதியளிக்க வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளையும் விதித்துள்ள காங்கிரஸ், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசு இதனை நிறைவேற்றியுள்ளது என எழுத்துமூல உறுதி மொழி வழங்கும் பட்சத்திலேயே இலங்கைக்கான இராணுவ உதவிகளை வழங்குவதற்கு இந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் அனுமதி வழங்குமெனத் தெரிவித்துள்ளது.

இதேசமயம் -

இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கான இராணுவ உதவிகளை அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ள அமெரிக்க காங்கிரஸ், அந்த நாடுகளுக்கும் மனித உரிமை விடயங்கள் தொடர்பாக நிபந்தனைகளை விதித்திருக்கிறது. (சி)

MATHS (Gr6- Gr11)
GROUP & PERSONAL CLASSES
*2008 ஆம் ஆண்டுக்கான ஆங்கில, தமிழ்மொழி மூலமான வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
*21.12.2007 வெள்ளி மாலை 3 மணி
*A/L - 2008, 2009 CHEMISTRY வகுப்புகள் நடைபெறுகின்றது. A/L - 2010 மிக விரைவில்......
K.நிரஞ்சன்
15/2, ஓடை ஒழுங்கை, யாழ்ப்பாணம்
(யாழ்.இந்துக் கல்லூரிக்கருகில்) (T.P.:0776139507) (69106)

இவ்ஆண்டிற்கான இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Computerized Accounting
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Network ஊடான கணக்குப்பதிவு முறைகளுடன்......
ACCPAC + Quick Books Premier + MYOB
Course Contents
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
வகுப்புக்கள் ஆரம்பம்.
Batch I: 20/12/2007
Batch II: 22/12/2007
Batch III: 23/12/2007
Batch IV: 24/12/2007
Time : 02.00- 03.00
கற்கைநெறியின் நன்மைகள்
1. Accounts இனை கணனிமயப்படுத்தல் தொடர்பான முழுமையான விளக்கம்
2. Multy User Accounting Software களில் Network ஊடான கணக்குப்பதிவு முறைகள்.
3. VAT தொடர்பான கணக்குப்பதிவு முறைகள்.
4. வரையறையற்ற செய்முறை பயிற்சிகளுடன்...!
COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE : 021-222 8230 , 0777 222 422

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரரத்தினம் சின்னம்மா

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கோணாவளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரரத்தினம் சின்னம்மா நேற்று (18.12.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோணாவளை வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
*தொ.பே.021-4590245*

தகவல்:
ரிந்தரன் (ரவி மகன்)

### மாணிக்கம் சாம்பசிவம்

*(ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர்)*

நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் சாம்பசிவம் 17.12.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தம்பதியினரின் மகனும் அமிர்தலிங்கம் தம்பதியினரின் மருமகனும், லோகநாயகியின் (ஓய்வு பெற்ற தட்டெழுத்தாளர்) அன்புக் கணவரும் கார்த்திகா(ஆசிரியை-கொழும்பு), ஹரிதாஸன்(மருத்துவ மாணவன்-ரஷ்யா),சோபிகா(2ஆம் வருடம், விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் (ஆசிரியை) சகோதரரும்,தேவகி கணேசானந்தன் (ஆசிரியை), வாசுகி (ஆசிரியை, கொழும்பு), மைதிலி கிருபாகரன் (கனடா), சுமதி (ஆசிரியை), கிருஸ்ணவேணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*35,அச்சுக்கூட ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
தேவகி கணேசானந்தன்
(மருமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.